

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
## மார்கழி – தை

மலர் 11 ஜனவரி – 2022 இதழ் 1

### பொருளடக்கம்


ஆசிரியர் பக்கம் 3

வண்டு ஸ்தோத்ரம் 6

பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள்

நீதிக் கதைகள் 12

பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள்

அனுக்கிரஹ பாஷணம் 14

பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள்

ப்ரதீபப் பேழை 17

முகாம் நிகழ்ச்சிகள் 22

ப்ரபோத சிந்தாமணி 24

பீஷ்மஸ்தவராஜம் – 13 26

ஸ்ரீ தேவி பாகவதம் 28

தை மாத விசேஷ தினங்கள் 32

மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ 33

பாப புண்யங்கள் 35

புராணக்கதை 43

மகாபாரத சுருக்கம் 45

ஸனாதன தர்மம் கேள்வி பதில்கள் 48


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு


ஸ்ரீ N. சிவராமகிருஷ்ணன்

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்

டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்

டாக்டர் G. சங்கரநாராயணன்








## ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :

டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்

டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்

பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா

ஸ்ரீ T.N. ராமசந்திரன்

ஸ்ரீ T.S. ராகவன்

பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.

ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா

பேராசிரியர் ம.வே.பசுபதி

பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்



வெளியிடுவோர் :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

அலுவலக முகவரி :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் – 631502.
தொலைபேசி : 044 – 27233115

மின் அஞ்சல் :

kamakotipradeepam@gmail.com

சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |

Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jaiganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।

कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை
# प्रार्थना

**मैत्रीम् भजत अखिलहृत् जेत्रीम् आत्मवदेव परानपि पश्यत**
**युद्दम् त्यजत, स्पर्धाम् त्यजत परेष्वक्रम आक्रमणम् ।**
**जननी प्रुथिवी कामदुधा आस्ते जनको देव: सकल दयाळु:**
**दाम्यत दत्त दयध्वम्  जनता श्रेयो भूयात् सकल जनानाम् ।।**

மைத்ரீம் பஜத அகில ஹ்ருத் ஜேத்ரீம் ஆத்மவதேவ பரானபி பஸ்யத
யுத்தம் த்யஜத ஸ்பர்தாம் த்யஜத த்யஜத பரேஷ்வக்ரம ஆக்ரமணம்
ஜனனீ ப்ருத்வீ காமதுதாஸ்தே ஜனகோ தேவ: ஸகல தயாளு:
தாம்யத தத்த தயத்வம் ஜனதா:: ஸ்ரேயோ பூயாத் ஸகல ஜனானாம் .

நட்பைப் பேணுங்கள். எல்லா உள்ளங்களை வெல்லும் நட்பைப் பேணுங்கள். யுத்தம், போட்டி இவைகளைத் தவிருங்கள். மற்றொருவர் மீது அக்ரம ஆக்ரமணத்தைத் விடுங்கள். நிலமகள் எல்லா விருப்பத்தையும் அளிப்பவள், தேவனான தந்தை சகல தயாளுவானவன். அடக்கமாயிருங்கள், தானம் செய்யுங்கள், தயையுடன் இருங்கள் மக்களே. எல்லா மக்களுக்கும் ஸ்ரேயஸ் இருக்கட்டும்.

(மகா பெரியவா)

# ஆசிரியர் பக்கம்

## எழுத்தாளர் கடமை

அச்சு எந்திரம் கண்டுபிடிக்கும் வரையில் எல்லாக் கல்வியும் வாய்மொழிக் கல்வியாக காது வழியாகக் கேட்டு வளர்ந்து வந்திருக்கிறது. அச்சு எந்திரம் வந்ததும் நிறைய ந்யூஸ் பேப்பர்கள், புஸ்தகங்கள் ஏற்பட்டுவிட்டன. பௌராணிகர்கள் இடத்தை இவை பிடித்துக் கொண்டுவிட்டன. எனவே பத்திரிகையாளர்களும் எழுத்தாளர்களும் தான் இன்றைய பௌராணிகர்கள். அவர்கள் எப்படி தர்மங்களை ரஸமான கதைகள் மூலம் ப்ரசாரம் செய்தார்களோ அவ்விதமே செய்ய வேண்டியது இன்றைய பத்திரிகையாளர்களின் கடமை. ஜனங்களுக்கு பிடித்ததை மட்டுமே சொல்வது என்று வைத்துக் கொள்ளக் கூடாது. அவர்களின் அறிவை, மனத்தை உயர்த்துகிற விஷயங்களை எழுத வேண்டும். இதை ஸ்வாரஸ்யமாகச் செய்ய வேண்டும். உத்தம விஷயங்களை புதுப்புது விதங்களில் உணர்த்த வேண்டும். நம்மையும் உயர்த்திக் கொண்டு வாசகர்களையும் உயர்த்த வேண்டும். இது பத்திரிகையாளர்களின் கடமை.

**மகா பெரியவா** *f* தெய்வத்தின் குரல்

அன்பார்ந்த வாசகர்களே

காமகோடி ப்ரதீபம் இம்மாதம் பத்து வருடங்கள் முடிந்து பதினோராவது வருஷத்தில் நுழைகிறது என்பதை பெருமையுடன் கூறுகிறேன். விவரத்திற்கு முன் ஒரு பீடிகை. பொதுவாக பத்திரிகை நடத்துவது கடினமான விஷயம். அதுவும் ஆன்மீகப் பத்திரிகை பற்றிக் கேட்க வேண்டாம். சுமார் 1970 இல் ப்ரின்ட் மீடியா நன்றாகத் தான் இருந்தது. 80களில் நாசமடையத் தொடங்கி இப்போது அதல பாதாளத்தில் உள்ளது. Visual Media பற்றிக் கேட்கவே வேண்டாம். ஆரம்பமே விரஸம்தான். தான் கெட்டது மட்டுமல்லாமல் சந்த்ர புஷ்கரணியையும் கெடுத்தானாம் என்னும் கதைதான். இதன் நடுவில் லாப நோக்கம் எதுவுமில்லாமல் பத்திரிகை நடத்துவது கடினம். சுமார் பத்து வருடங்களுக்கு முன் ஸ்ரீ ராமசர்மாவும் நானும் மீண்டும் காமகோடி ப்ரதீபத்தைக் கொண்டுவர வேண்டும் என்று விரும்ப பெரியவாளும் இணங்க ப்ரதீபமும் வரத் தொடங்கியது. திடீரென்று ஸ்ரீ ராமசர்மா விலக பத்திரிகை நிற்கக் கூடாது என்னும் காரணத்தால் நான் அந்த பொறுப்பை ஏற்றுக் கொண்டு இது வரையில் வெளியிட்டுள்ளேன். ப்ரதீபத்தின் நோக்கம் மகா

பெரியவா சொல்லியபடியே வேத,வேதாந்த விஷயங்கள், புராண இதிஹாஸங்கள் பற்றிய கட்டுரைகள் வித்யாசமான அணுகுமுறையில் இதிஹாசங்களின் கருத்தைச் சொல்லுதல், அரைத்த மாவையே அரைக்காமல் புது விஷயங்களைப் பதிப்பித்தல். இதுவரை வெளி வராத ஸ்தோத்ரங்களை வெளியிடல் இப்படி இதழ்களை கொண்டு வருகிறோம்.

நிறைய பேர் இந்த குறிக்கோளுக்கு மாறாக கருத்தைக் கூறினாலும் அதை ஏற்காமல் லக்ஷியத்தை விடாமல் பதிப்பிக்கிறோம். குருவருளும், அம்பாள் அருளும் இதற்கு வழிகாட்ட நாங்கள் இயங்கிக் கொண்டிருக்கிறோம். Finance Section ஐ ஸ்ரீ ஜயராம கிருஷ்ணன் கவனிக்க, Printing Section ஐ ஸ்ரீ ரவி, ஜெய் கணேஷ் பிரிண்டர்ஸ் அவர்கள் கவனிக்க இதழ்கள் வெளிவருகின்றன. அதற்கு அவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றி. சில இதழ்களில் Font incompatability யினால் சில தவறுகள் வந்துள்ளன. அவைகளையும் சரி செய்துவிட்டோம்.

இவ்விதழில் ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகளின் ''ப்ரம்மவிதாசீர்வாத பத்ததி'' என்னும் வேதாந்த க்ரந்தத்தை வெளியிடுகிறோம். ப்ரார்தனை என்னும் பகுதி தொடங்கியுள்ளோம். இன்னும் சில மாற்றங்கள் வரும் இதழில் காணலாம். வாசகர்கள் எமது குறைகளை சுட்டிக் காட்டலாம், அதே சமயத்தில் நிறைகளையும் சுட்டி காட்டவும் என்று கூறி பெரியவா காட்டிய வழியில் பயணத்தைத் தொடருகிறோம் என்று முடித்து இவ்விதழை ஸ்ரீசரணர்களின் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.

ஜய ஜய சங்கர ஹர ஹர சங்கர

# வாசகர்கள் அனைவருக்கும்
# இனிய புத்தாண்டு
## மற்றும்
# பொங்கல் நல்வாழ்த்துக்கள்

# வண்டு ஸ்தோத்ரம்

### ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## அக்கரை அடைவிப்பாய்

**தாரய ஸம்ஸார ஸாகரத:**



என்று முதல் ச்லோகத்தை ஆசார்யாள் முடிக்கிறார். 'ஸம்ஸார ஸாகரத்திலிருந்து கரையேற்று' என்று அர்த்தம்.

தாரகம் என்றால் கடத்துவிப்பது, படகிலே வைத்து ஒட்டிக் கொண்டு போய் அக்கரை சேர்ப்பது என்று அர்த்தம். ப்ரணவத்தையும், ராம நாமாவையும் தாரக மந்த்ரம் என்று சொல்வது வழக்கம். தாரக நாமா என்று த்யாகராஜர் கூட ராமசந்த்ர மூர்த்தியை தாபத்தோடு கூப்பிட்டுப் பாடியிருக்கிறார். ஸம்ஸாரக் கடலில் விழுந்து, அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிற நம்மைப் படகிலே தூக்கிப்போட்டுக் கொண்டு பரமபதமான அக்கரையில் கொண்டு போய்ச் சேர்ப்பது தான் தாரக மந்த்ரம்.

இந்த ச்லோகத்தில் என்னென்னவோ வேண்டிக் கொண்டாரே, அவிநயம் போகவேண்டும், மனஸ் அடங்க வேண்டும், இந்த்ரியங்களின் கானல் நீர் வேட்கை முடிய வேண்டும், ஸமஸ்த ஜீவ ராசிகளிடம் தயை பெருக வேண்டும் என்றெல்லாம் வேண்டிக் கொண்டாரே, அத்தனைக்கும் முடிந்த முடிவு என்ன என்றால், ஸம்ஸாரம் என்ற இந்த ஜனன - மரண சக்ரத்திலிருந்து தப்பி மோக்ஷஸ்தானம் என்ற நித்ய ஸுகமான விடுதலை நிலையில் சேரவேண்டும் என்பது தான்.

இப்போது நாம் இந்த ஸம்ஸாரத்தில் சிக்கிக்கொண்டு அவதிப்படுவது நன்றாகத் தெரிகிறது. இதிலிருந்து மீள வேண்டும். மீட்கிறவன் பகவான் தான். அவனிடம், 'அப்பா, இந்த பாவக் கடலிலிருந்து அக்கரைக்குக் கடத்துவி!'

**தாரய ஸம்ஸார ஸாகரத:**

என்று ப்ரார்த்தனை பண்ணவேண்டும்.

அவன் இந்த ஸம்ஸாரக் கடலிலிருந்து நம்மை மீட்பானானால் அப்புறம் நாம் இப்போது இந்த லோகத்தில் படுகிற துக்கம், கஷ்டம் இராது. அந்த மட்டில் இப்போதைக்குப் போதும். உங்களுக்கு நான் அத்வைத முக்தி, த்வைத முக்தி, விசிஷ்டாத்வைத முக்தி என்ற பேதங்களையெல்லாம் இங்கே சொல்லப் போவதில்லை. எந்த ஸித்தாந்தத்தைச் சேர்ந்தவர்களானாலும் பகவத்பாதாள் இந்த ச்லோகத்தில் சொல்லியிருக்கிற மாதிரி பகவானிடம் ப்ரார்த்தனை பண்ணுவோம். ப்ரார்த்தனைக்கு பலனைத் தர வேண்டிய பல தாதாவாக இருக்கப்பட்ட பகவான் எந்த தினுஸில் நமக்கு இந்த ஸம்ஸாரத்திலிருந்து மீட்சி தர நினைக்கிறோனோ, அப்படித் தருவான்.

இங்கே 'தாரய ஸம்ஸார ஸாகரத:' என்று சொன்ன மாதிரியே, இதைவிடக் கூட மனஸை உருக்கும்படியாக 'பஜ கோவிந்த'த்திலும் ஆசார்யாள்,

**இஹ ஸம்ஸாரே பஹு துஸ் தாரே**
**க்ருபயா பாரே பாஹி முராரே**

என்று முறையிட்டிருக்கிறார்.

தாரம் - கடப்பது; துஸ்தாரம்- கடக்க முடியாதது; பஹு துஸ்தாரம் - இந்த ஸம்ஸாரம் அடியோடு கடக்க முடியாதது தான். அதாவது நாமாக எத்தனை முயற்சி பண்ணினாலும் முடியாது. ஆனால் பகவானின் க்ருபை பொங்கி வந்துவிட்டால் இந்த ஸம்ஸாரம் என்ன பண்ணும்? அவனுடைய அருளால் எதைத்தான் செய்ய முடியாது? 'அப்படிப்பட்ட உன் க்ருபையால் என்னை அக்கரை சேரப்பா, முராரியே!' என்று ப்ரார்த்திக்கிறார். பாரம் என்றால் கரை. இங்கே ஸம்ஸாரக் கடலின் அக்கரையில் சேர்க்கச் சொல்வதாக அர்த்தம்.

புத்தியிலும், ஞானத்திலும், வாக் சக்தியிலும் மேரு மாதிரியான நம் ஆசார்யாள், பரம பவ்யமாக அடங்கி நின்று, 'நம்மால் ஆவது எதுவுமில்லை; ஈச்வர க்ருபைதான், தயைதான் எதையும் செய்யும்' என்கிற விநயத்தோடுகூட 'க்ருபயா', 'தயயா' என்று

சொல்கிற இடங்கள் ‘ஸௌந்தர்ய லஹரி’யிலும் உண்டு. ‘தகுதி பார்க்காமல் என்னையும் உன் கடாக்ஷ தாரையால் க்ருபையோடுகூட ஸ்நானம் பண்ணுவிப்பாய் அம்மா’’ என்கிற இடத்தில் ‘ஸ்நபய க்ருபயா மாம் அபி சிவே’என்கிறார். மறுபடியும், ‘‘அம்மா, என் தலையிலும்கூட உன் பாதங்களை தயையோடு வைப்பாய்’ என்கிறபோது, ‘‘சிரஸி தயயா தேஹி சரணௌ என்கிறார்.’

ஷட்பதீ ஸ்தோத்ரத்தில் ‘‘க்ருபயா’ என்று போடாவிட்டாலும் இந்த ஸ்துதி பூராவும் பகவானின் க்ருபையையும் மற்ற அனந்த கல்யாண குணங்களையும் பரம மங்கள ஸ்வ ரூபத்தையும் நினைத்துக் கொண்டேதான் செய்திருக்கிறார். நமக்கே அவனிடமிருந்து தான் பூத தயை வேண்டுகிறோம் என்றால் அதன் தயாளுவாக, க்ருபாளுவாகத்தானே இருக்க வேண்டும்?

## இனிய எளிய ச்லோகம்

அடுத்த ச்லோகத்தில் பகவானின் பாதத்தை வர்ணிக்கிறார் நம் பகவத்பாதாள். ‘ஷட்பதீ’ யின் அடுத்த பதம் பகவத் பாதம்!

**திவ்யது நீ -மகரந்தே**
**பரிமள பரிபோக ஸச் சிதாநந்தே!**
**ஸ்ரீபதி பதாரவிந்தே**
**பவ பய நேத ச்சிதே-வந்தே!!**

திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டேயிருக்கலாம் போல் மதுரமான அக்ஷரங்களோடு, நளினமான பதச் சேர்க்கையோடு இருக்கிறது ச்லோகம். பகவானின் பாத தாமரையை வர்ணிக்கிற ச்லோகத்தில் வார்த்தைகளும் புஷ்பம் போல் ம்ருதுவாக அமைந்திருக்கின்றன. ‘மகரந்தே’, ‘ஆனந்தே’, ‘அரவிந்தே’, ‘வந்தே’ என்று ஒவ்வொரு பாதமும் rhyme-ஆக முடிவதிலேயே ஒரு ஆனந்தம் சுரக்கிறது.

செய்யுளின் ஒவ்வொரு அடியின் ஆரம்பமும் rhyme ஆவது தமிழில் விசேஷமாக இருக்கிறது. இதற்குத்தான் ‘எதுகை’ என்று பெயர். தேவாரத்தில், திவ்ய ப்ரபந்தத்தில் எங்கே பார்த்தாலும் இப்படித்தான் ஒவ்வொரு அடியின் நாலுவரியிலும் ஆரம்ப அக்ஷரம் ஒரே தொனியில் எல்லாம் நெடிலாகவோ குறிலாகவோ ஆரம்பிக்கும்; அந்த முதல் வார்த்தையின் இரண்டாம் எழுத்து நாலு அடியிலும் ஒன்றாகவே இருக்கும்.

**காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி**
**ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது**
**வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது**
**நாதன் நாமம் நமச்சி வாயவே**

என்கிற போது, முதலெழுத்து எல்லாம் கா, ஓ, வே, நா என்கிற நாலும் நெடிலாக இருக்கின்றன. இரண்டாவது எழுத்து நாலுவரியிலும் த தான். இது ஞான ஸம்பந்தர் தேவாரம். இதே மாதிரி அப்பர் ஸ்வாமிகள் நமசிவாய மஹிமையைச் சொல்லி,

**சொற்றுணை வேதியன் சோதி வானவன்**
**பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்**
**கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்**
**நற்றுணை யாவது நமச்சி வாயவே**

என்று பாடுகிறபோது, முதல் வரியின் முதல் எழுத்து 'சொ' என்று குறிலாக இருப்பதால் மற்ற வரிகளிலும் 'பொ', 'க', 'ந' என்று குறிலே ஆரம்பமாயிருக்கிறது. இந்த தேவாரத்தில் 'ற்று' இரண்டாவது எழுத்தாக மட்டுமில்லாமல், மூன்றாவது எழுத்தான ணை'யும் எல்லா வரியிலும் திரும்புகிறது .

ஒரு செய்யுளின் ஆரம்ப வார்த்தைகள் 'ரைம்' ஆகிற எதுகையை ஆரம்ப ப்ராஸம் என்பார்கள். ஸாதாரணமாக ஸம்ஸ்க்ருதத்தில் இப்படி ஆரம்ப வார்த்தைகள் ரைம்' ஆகாமல் ஒவ்வொரு வரியின் முடிவான வார்த்தையும் தான் 'ரைம்'' ஆவது வழக்கம். அந்திய வார்த்தை ஒரே மாதிரி வருகிற இந்த அணியை அந்த்ய ப்ராஸம் என்பார்கள். உதாரணமாக இந்த மடத்துப் பூஜை முடிவில் ஒவ்வொரு வேளையும் சொல்கிற

**ஸமரவிஜய கோடீ ஸாதகாநந்த தாடீ**
**ம்ருதுகுண கணபேடீ முக்ய காதம்ப வாடீ**
**முனிநுத பரிபாடீ மோஹிதாஜாண்ட கோடீ**
**பரமசிவ வதூடீ பாதுமாம் காமகோடீ**

என்கிற ச்லோகதித்ல் பளிச்சென்று தெரிகிற மாதிரி ஒவ்வொரு அடியின் முடிவும் ரைம்' ஆகிற அந்த்ய ப்ராஸம் வருகிறது. இது ஜகன்மாதாவான காமாஷியைப் பற்றி மூகர் பண்ணின 'பஞ்ச சதீ' யில் வருகிற ச்லோகம்,

தத்வ ரீதியிலும், அனுபவரீதியிலும், கவித்வ ரீதியிலும் உயர்ந்ததான ஸ்துதிகளில் இம்மாதிரிச் சொல்லணிகளும் சேர்ந்து அவற்றின் அழகையும் சிறப்பையும் உயர்த்துவதுண்டு. ஷட்பதீ ஸ்தோத்ரத்திலும் இப்படிப்பட்ட சொல் ஜாலங்கள் (word-play) நிறைய உண்டு.

இடையின, மெல்லின எழுத்துக்களில் ஒரே மாதிரி திரும்பத் திரும்ப வந்தால் சொல்வதற்கே மதுரமாக இருக்கும். 'அவிநயம் அபநய; தமய மந: சமய' என்கிறபோது ந, ய, ம என்ற அக்ஷரங்கள் திரும்பத் திரும்ப வருகின்றன. சொல்ல அழகாக இருக்கிறது. ஒரே போன்ற சப்தங்களுள்ள வார்த்தைகள் அடுக்காக வருகின்றன. 'விஸ்தாரய-தாரய' என்றும் போட்டிருக்கிறார். இதை யமகம்' என்றும் மடக்கு' என்றும் சொல்வார்கள்.

உச்சரிப்பதற்கு அழகாக இருப்பதோடு இப்படிப்பட்ட சொல்லணிகளைக் கையாள்வதால் அவை மனஸில் நன்றாகப் பதிந்து ச்லோகங்களை நினைவு வைத்துக்கொண்டு மனப்பாடம் பண்ணுவதும் ஸுலபமாகிறது.

இரண்டாவது ச்லோகம், சற்று முன் சொன்னேனே, அதில் 'மகரந்தே, ஆனந்தே, அரவிந்தே, வந்தே' என்று அந்த்ய ப்ராஸம் வைத்துக் கவித்வ ரீதியில் ச்லோகத்தை அலங்காரம் பண்ணியிருக்கிற ஆசார்யாள், அதனாலேயே ஸுலபமாக நெட்டுருப் போடுகிற மாதிரியும் அநுக்ரஹம் பண்ணியிருக்கிறார்.

## திருமகளும் தாமரையும்

பகவான் விஷ்ணுவின் பாதங்களைத் தாமரைப் பூவுக்கு ஒப்பிடுகிறார் நம் பகவத்பாதாள்கள்.

**ஸ்ரீபதி பதாரவிந்தே**

பத அரவிந்தம் என்றால் திருவடித் தாமரை. ஸ்ரீ என்றால் மஹாலக்ஷ்மி. ஸ்ரீபதி - லக்ஷ்மி நாராயணன். ஸ்ரீபதிக்குத் தாமரைப் பாதமிருப்பது மிகவும் பொருத்தம் ஏனென்றால் லக்ஷ்மிக்கு தாமரைப்பூ ஸம்பந்தம் ரொம்பவும் ஜாஸ்தி.

**பத்மப்ரியே பத்மினி பத்ம ஹஸ்தே**
**பத்மாலயே பத்ம தளாயதாக்ஷி**

என்று அவளை ஸ்தோத்ரம் செய்வார்கள். அவளுக்கு தாமரைப் பூவிடம் ப்ரியம் அதிகம். ஆகையால் 'பத்ம பரியே' ! பத்மினி என்றால் தாமரைக்கொடி. மஹாலக்ஷ்மி

இப்படித்தான் ஸௌகுமார்யத்தால் துவண்ட கொடியாக இருக்கிறாள். பெண்களில் உத்தமமான லக்ஷணம் உடையவர்களை 'பத்மினி ஜாதி' என்பதே வழக்கம். 'பத்மினி' என்றால் பத்மங்களை உடையவள் என்றும் அர்த்தம் செய்து கொள்ளலாம்.

லக்ஷ்மி நித்யவாஸம் செய்வதாக ஐந்து இடங்கள் உள்ளன. தாமரைப் பூவின் மத்தி, யானையின் மஸ்தகம் (தலை), பசுவின் பின்புறம், வில்வ இலையின் பின்பக்கம், ஸுமங்கலிகளின் ஸீமந்தம் (வகிடு) என்பவை இந்த ஐந்து. இப்படி ஐந்து இருந்தாலும் எல்லாருக்கும் தெரிந்தது அவள் தாமரைப்பூவில் உட்கார்ந்திருக்கிறாளென்பது தான். படங்களில் அப்படியே போட்டிருக்கிறது. சில்பங்களும் அப்படித் தான் இருக்கின்றன... அதனால் தான் 'பத்மாலயே!' என்றது.

அவளுடைய நான்கு கைகளில் இரண்டில் இரண்டு தாமரைப்பூவை வைத்துக் கொண்டிருக்கிறாள். ஆகையால் 'பத்மஹஸ்தே!' அவளுடைய கண்கள் விரிந்த தாமரை இதழ்போல இருக்கின்றனவாதலால் 'பத்மதளாயதாக்ஷி'. அவளுடைய முகமும் தாமரை போன்றது. இந்த ச்லோகத்தில் அதைச் சொல்லாவிட்டாலும் (லக்ஷ்மி) அஷ்டோத்தரத்தில் 'பத்ம முகி' என்று இருக்கிறது.

பத்ம ஸம்பந்தமாகவே அதிலும் அநேகம் பெயர்களைச் சொல்லியிருக்கிறது. தாமரைப் பூவாலேயே மாலை போட்டு கொண்டிருக்கிறாளாம். 'பத்ம மாலாதரா'. அவளுடைய திவ்ய தேஹம் தாமரை போன்ற வாஸனை வீசுகிறதாம்.

'பத்ம கந்திநி'. இவள் 'பத்மப்ரியா'வாகத் தாமரையிடம் ப்ரியம் வைத்துள்ளது போல இவளிடம் ப்ரியம் வைத்திருப்பது யாரென்று பார்த்தால் அது நாபியிலேயே ஒரு தாமரையை மலர்த்திக் கொண்டிருக்கிறவனாக இருக்கிறது.-'பத்மநாப ப்ரியா' என்று அஷ்டோத்தரம் சொல்கிறது.

'பத்மாவதி', 'கமலா', ' அம்புஜா' 'பங்கஜா' என்றெல்லாம் தாமரையை வைத்தே லக்ஷ்மிக்குப் பெயர்கள் இருக்கின்றன. இதற்கேற்றாற்போல் அவளுடைய பதி, ஸ்ரீபதியின் பதம் தாமரையாக இருக்கிறது. ஸ்ரீபதி பதாரவிந்தே. அரவிந்தாஸனையான லக்ஷ்மி ஸீராப்தியில், சேஷ பர்யங்கத்தில் பகவானின் பாதாரவிந்தத்தைத்தான் பிடித்துக் கொண்டிருக்கிறாள். அவளையும் இந்த ச்லோகத்தில் சொல்லாமல் சொல்லி தம்பதி ஸமேதராக தர்சனம் பண்ணி வைக்கிறார்.

(தொடரும்)

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

# இசைஞானியார்



ஈசருடன் தோழமையுணர்வு கொண்டு அவனைப் பித்தாபேயா என அழைத்து ஆட்கொள்ளப்பட்டவர் சுந்தரர். அவர் பாடிய திருத் தொண்டத் தொகையைக் கருவாகக் கொண்டே பின்னர் சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்தைப் பாடினார்.

நாம் கடைய நாயினார் என்று போற்றும் இறைவனின் திருத்தொண்டருக்கும் அவருக்குத் தகைமை சால் பத்தினியாகிய இசைஞானியார் என்னும் மாதரசிக்கும் (அறுபத்து மூவருள் இவ்விருவரும் அடங்குவர்) சுந்தரர் திருஆரூர் ஈசன் அருளால் மகவாய் வாய்த்தமையின் நம்பி ஆரூரர் எனப் பட்டார்.

தாயைப் போல் பிள்ளை என்பதற்கேற்ப, சுந்தரர் சொற்றமிழ் பாடுகென்றார் தூமறை பாடும் வாயார்ஆக, இசையுடனே திருப்பதிகங்களைப் பாடினார். அவ்விசைஞானம் தாயினிடம் பெற்றதாக கொள்ளத் தக்கதே. ‘இசை ஞானியார்’’ என்பது இயற் பெயரென்று சிவபக்தியை இசை வாயிலாகப் பரப்பியதால் அப்பெயர் ஏற்பட்டதென்றும் அறிஞர் கூறுவர். சுந்தரர் போன்று சமயக் குரவர் நால்வரின்

ஒருவரை ஈசனே தன் தோழர், தம்பிரான் என்று அழைத்தவரைத் தம் தவத்தால் மகவாக வாய்க்கப் பெற்றவர் பெருமை அளவிடற் பாலதோ?

**ஆரூரர் அவதரிக்க அருந்தவங்கள் புரிந்தார்**
**யாவருக்கும் எட்டாத இசைந்த இன்ப**
**இசை ஞானி என ஞானம் எளிதாய் அன்றே**

திருத்தொண்டர் புராண சாரம்.

# திருநீல நக்கரின் இல்லாள்

## அன்பின் பெருமை

திருச்சாத்த மங்கை என்னும் தலத்தில் ஈசனை ஆகம விதிப்படி அர்ச்சித்து அடியார்களுக்கு அமுது செய்வித்தலுமாகிய அரும் பணிகளைத் திருநீலநக்கர் என்ற அந்தணச் செம்மல் செய்து வந்தார். திருவாதிரை நாளன்று தம் மனைவியிடம் பூசைக்கு வேண்டிய திரவியங்களைக் கொடுத்தார். தானும் உடன் சென்று வழிபாடியற்றினார். பூசையின் முடிவில் தியானத்தில் அமர்ந்தார்.

அச்சமயத்தில் மேலிருந்து ஒரு சிலந்தி சிவலிங்கத் திருமேனியின் மீது விழுந்தது. இன்றும் நம்நாட்டில் பச்சைக் குழந்தையின் மீது சிறு சிலந்தி விழுந்தால் அதை வாயினால் ஊதி விட்டு விடுவர், அவ்விடம் புண்ணாகாமலிருக்க அவ்விடத்தில் எச்சில் சிலந்தி சிவபிரானார் திருமேனி மீது விழுந்தது கண்டு, நாயனாரின் பத்தினி தன் அருமை மகவுக்கே நச்சுப் பற்று ஏற்பட்டதோ என மின்னலால் தாக்கப்பட்டது போன்று, வாயால் அச்சிலந்தியை ஊதி அவ்விடத்தை எச்சிலால் துடைத்து விட்டாள்.

நாயனாரின் தியான நிலை கலைந்தது. நடந்ததை அறிந்தார். தம் பத்தினி மீது கடுஞ்சினங் கொண்டு தம் உறவை துண்டித்துக் கொண்டார். கருவறையை தூய்மை செய்ய வேண்டிய சடங்குகளை நிகழ்த்தி மீண்டும் பூசனை புரிந்து இல்லம் ஏகினார்.


அன்றிரவு நீலநக்கர் துயில் கொண்ட போது கனவில் சிவனார் திருமேனி தோன்றியது. அம்மையார் ஊதிய இடம் தவிர எஞ்சிய பகுதி எல்லாம் கொப்புளங்கள் ஏற்பட்டு மேனி வெம்பி விட்டது. இறைவன் ‘இப்போதாவது அம்மை எனக்குச் செய்த தன் தன்மையை அறிந்தனயோ‘ எனக் கேட்க நாயனார் துயில் நீங்கி மகிழ்ந்து ஆடினர், பாடினார். சுயவந்தி என்ற அவ்வாலயத்திற்குச் சென்றார். மண்டபத்தில் ஒரு மூலையில் உணவும் நீருமின்றி ஒருங்கி நின்ற தம் மனைவியிடம் தன்னை மன்னிக்குமாறு வேண்டி அவளுடன் இறைவனைப் பணிந்து இன்புற்றார். இறைவனையே தன் மகளாக பாவித்த மாதரசியின் மாண்பினைப் பெரிய புராணத்தில் விவரிக்கும் சேக்கிழாருடன் நாமும் போற்றி மகிழ்வோம்.

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## திருப்பதி முகாம்

## திருவாதிரை முன்னிட்டு பெரியவா ஆற்றிய அருளுரை 1



**நமச்சிவாய வாழ்க**
**நாதன் தாள் வாழ்க**
**இமைப் பொழுதும் என் நெஞ்சில்**
**நீங்காதான் தாள் வாழ்க**

நாம் சித்திரை மாதம் முதல் பங்குனி மாதம் வரையிலே, பல்வேறு பண்டிகைகளை கொண்டாடுகிறோம். வ்ரதங்களை அனுஷ்டானம் செய்கிறோம். உற்சவங்கள் நடத்துகிறோம். வேதத்திலே நக்ஷத்திர ஸுக்தத்திலே திருவாதிரை நட்சத்திரம் பற்றி மிகச் சிறப்பாக சொல்லப்பட்டு இருக்கிறது.. சிவபெருமானும், அந்த திருவாதிரை நக்ஷத்திர தேவதையும் நமது தோஷங்களையும், பாவங்களையும் நீக்கி, நமக்கு ஐஸ்வர்யத்தை , சுபிக்ஷத்தை அளிக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்யப்படுகிறது.

அந்தத் திருவாதிரை என்று சொல்லக் கூடிய விழாவானது, மார்கழி மாதத்திலே வருகிறது.

மார்கழி மாதத்தில் இரண்டு பண்டிகைகள் பிரசித்தமாக வருகின்றன. ஒன்று வைகுண்ட ஏகாதசி. இரண்டாவது திருவாதிரை. **சிவஸ்ய ஹ்ருதயம் விஷ்ணு: விஷ்ணோஸ்ச ஹ்ருதயம் சிவ** !!'' என்று சிவ பெருமானுக்கும், பெருமாளுக்கும் உரிய இரண்டு பிரசித்தமான பண்டிகைகள் மார்கழி மாதத்தில் வருவது மிகச் சிறப்பு.

அந்த திருவாதிரை நட்சத்திரமானது மார்கழி மாதத்தில் இரண்டு முறை வருமானால், இரண்டாவது நக்ஷத்திரத்திலே அந்த உற்சவம் செய்யப்பட வேண்டும். பௌர்ணமியோடு சேர்ந்து வந்தால் விசேஷம். அல்லது மற்றபடியும், திருவாதிரை நட்சத்திரம் வேறு ஒரு நாள் இருக்குமானால், நக்ஷத்திரம் என்று இருக்கிறதோ, திருவாதிரை நட்சத்திரம் என்று இருக்கிறதோ, அன்றைய தினம் சிவ பெருமானுக்கு அபிஷேகம் செய்வித்து, நடராஜ சுவாமியை நாம் தரிசனம் செய்து கொள்ள வேண்டும். திருவெம்பாவை மூலமாக, துதிக்கப்படுகின்ற சிவ பெருமானை, தமிழ் நாட்டிலே ஐந்து சபையிலே கொண்டாடி வருகிறோம். திருநெல்வேலி, குற்றாலம், மதுரை, சிதம்பரம், திருவாலங்காடு என்கிற பஞ்ச சபைகளிலே,

பொற்சபை : (திருமூலட்டநாதர் திருக்கோயில், சிதம்பரம்)

இரஜித சபை : (வெள்ளி சபை-மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை)

இரத்தின சபை : (வடராண்யேஸ்வரர் திருக்கோயில், திருவாலங்காடு)

தாமிர சபை : (நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி)

சித்திர சபை : (குற்றாலநாதர் திருக்கோயில், குற்றாலம்) என்று சொல்லக் கூடிய இந்து ஐந்து சபைகளிலே, நாம் விசேஷமான அபிஷேகங்களை நடத்தி, அர்ச்சனைகள செய்து, தீபாராதனைகள் செய்து, நெய்வேத்யங்களைப் படைத்து மகிழ்கிறோம்.

ஒவ்வொரு தெய்வத்திற்கும், ஒரு விதமான வழிபாட்டு முறை சிறப்பாக சொல்லப்படுகிறது.

சூரிய பகவானுக்கு நமஸ்காரம் என்பதும், திருமாலுக்கு, பெருமாளுக்கு அலங்காரம் என்பதும், சிவ பெருமானுக்கு அபிஷேகம் என்பதும் மிகச் சிறப்பாக கருதப்படுகிறது. **அபிஷேகப் ப்ரிய: சிவ:** என்று சொல்லப்படுகிறது.

**ஏக வில்வம் சிவார்ப்பணம்** என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட இந்த நல்ல நாளிலே, திங்கட்கிழமை அதி காலையிலே, பக்தர்கள் அனைவரும் ஸ்நானம் செய்து, கோவிலுக்குச் சென்று, வெவ்வேறு திரவியங்களால் செய்யக் கூடிய அபிஷேகங்களை கண்டு களித்து, நீர், பால், தயிர், தேன், பழ ரசங்கள், இளநீர், சந்தனம் என்று அநேக திரவியங்களால் செய்யக் கூடிய அந்த அபிஷேகத்தை கண்ணாரக் கண்டு, மனதார பக்தி

பூர்வமாக வழிபட்டு, சிறப்பான நெய்வேத்யங்களைச் செய்து, தீபாராதனை நமக்கு அனைத்து நல்லதும் கிடைக்க வேண்டும், நம்முடைய தோஷங்கள் நிவர்த்தி அடைய வேண்டும், **ஸர்வ மங்கள ப்ராப்த்யர்த்தம், ஸர்வாரிஷ்ட நிவ்ருத்யர்த்தம்** என்று சொல்லக் கூடிய தீபாராதனையைக் காட்டி, **ஆலயம் தொழுவது சாலமும் நன்று** என்கிற பழமொழிக்கு ஏற்ப, அரம் செய்ய விரும்பு என்கிற பழமொழிக்கு ஏற்ப, பக்தர்கள் கோவில்களை நல்ல முறையில் பராமரிக்க வேண்டும், சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும், உழவாரப்பணிகளை செய்ய வேண்டும். அந்தக் கோவில்கள் யாருடைய பொறுப்பில் இருந்ததாலும், பொது மக்கள் இறைவனுடைய பக்தியிலே ஆர்வமாக ஈடுபட்டு, சிறப்பாக பணிவிடைகளைச் செய்து, தொன்மையான அந்த ஆலயங்களை தூய்மையாகப் பராமரித்து மேன்மேலும் ஆன்மீக வளர்ச்சி அடைய வேண்டும். சிவ நாமத்தை ஜெபிக்க வேண்டும். எங்கெல்லாம் முடிகிறதோ அங்கெல்லாம் வில்வ மரத்தை நட்டு, நீரை இட்டு, வில்வ மரங்களை நட வேண்டும்.

சுத்தமான விபூதியை தரிக்க வேண்டும். திருநீறை பூசிக்க வேண்டும். ருத்ராக்ஷம் தரிக்க வேண்டும். நாள் கிழமைகளிலே, விரத அனுஷ்டானங்களை மேற்கொள்ள வேண்டும். உடல்களிலும் சரி, உணர்வுகளில் சரி நாம் விரதங்கள், அனுஷ்டானங்களை மேற்கொள்ள வேண்டும். இப்படி ஆருத்திரா நக்ஷத்திரம் என்ற திருவாதிரையை மக்கள் ஸ்ரத்தையுடனும், பக்தி பூர்வமாகவும் அனுசரித்து, மிகவும் அதிகமான கலையம்சம் கூடிய பல நடராஜர் கோவில்களை தமிழகம் கண்டிருக்கிறது.

உத்திரகோசமங்கை என்ற இடத்தில் நடராஜரின் மரகத லிங்கம் அமைந்து இருக்கிறது. மிகப் பெரிய நடராஜா விக்கிரகங்களும் இருக்கின்றது. இப்படி **தென்னாடு உடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி,** என்று சொல்லக்கூடிய, சிவ பெருமானுக்கு உகந்த தென்னாட்டிலே, அந்தத் திருவாதிரை விழாவை பொது மக்கள் அனைவரும் சென்மையாகக் கொண்டாடி, பக்தியை வளர்த்துக் கொண்டு, அதன் மூலம் மனதிலே சாந்தியும், ஐஸ்வரியத்தையும், நல்ல கல்வி அறிவையும் பெற்று, பேரானந்த பெருவாழ்வை அடைவதற்கு முயற்சிக்க வேண்டும்.

**ஹர ஹர சங்கர**
**ஜெய ஜெய சங்கர**

# ப்ரஹ்மவிதாசீர்வாத பத்ததி

சாஸ்த்ர ரத்னாகர பண்டிதராஜ போலகம் ஸ்ரீ ராம சாஸ்திரிகள்

**विद्यासन्ध्योदयोद्रेकादविद्यारजनीक्षये ।**
**यदुदेति नमस्तस्मै कस्मैचिद्विश्वतस्वषे ।।**

ப்ரஹ்ம வித்யையாகிய ப்ராதஸ்ஸந்த்யை நன்கு உதித்தால், அவித்யையாகிய இரவு போய் விடும். அப்பொழுது ஜகத் ப்ரகாசமாயுள்ள ஆத்ம ஜ்யோதிஸ்ஸாகிய சூரியன் உதிப்பான். அந்த ஜ்யோதிஸ்ஸுக்கு நமஸ்காரம். இப்படி ந்யாயாசார்யர்‘ என்று பிரசித்தரான உதயனாசார்யர் கூறுகிறார். ப்ராதஸ்ஸந்த்யை உதித்தால் இரவு போய் விடும்; அப்பொழுது ஜகத் ப்ரகாசமாய் ஸூர்யன் உதிப்பான். அதுபோல் ப்ரஹ்ம வித்யை நன்கு அநுபவரூபமாக ஏற்பட்டால் அவித்யை விலகும். அப்பொழுது ஜீவாபிக்க அதவிதீய அகண்ட பரிபூர்ண ஸச்சிதானந்த ஸ்வரூபமான பரப்ரஹ்மம் விளங்கும் என்பது இதன் பொருள்.

**ब्रह्मविदाशीर्वादा: पञ्चशत् पद्धतौ त्रयश्रेक्ता: ।**
**विद्यारणयैस्तत्रावकाशमनुसत्य काश्रिदाख्यास्ये ।।**

நேயர்களே, உலகப் பிரசித்தரான ஸ்ரீ வித்யாரண்யஸ்வாமிகள், தாம் அருளிய ’ப்ரஹ்ம விதாசீர்வாத பத்ததி’ என்ற சிறிய நூலில், ஜீவன் முக்தனாய் விளங்கும் ப்ரஹ்மஜ்ஞானியான ஓர் மஹாத்மா ஸம்ஸாரிகளான நம்மைப் போன்ற ஜீவர்களை உத்தேசித்துக் கருணையால் செய்யும் ஐம்பத்து மூன்று ஆசிர்வாத வசனங்களைக் குறித்திருக்கிறார். அந்த ஆசீர்வாதங்களில் அத்வைத சாஸ்த்ர ஸம்பந்தமுள்ள உயர்ந்த பல கருத்துகள் அடங்கியிருக்கின்றன. அவைகளில் சிலவற்றை இந்தச் சிறிய வியாசத்தில் வெளியிட முன்வந்துள்ளேன்.

ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்யர் உபநிஷத்துகளில் ரகசியமாகக் கூறப்படும் அத்வைத தத்துவத்தைச் சுலபமாக எல்லா ஜனங்களும் அறிந்து கடைத்தேறும் பொருட்டு, உபநிஷத் பாஷ்யம், பகவத் கீதா பாஷ்யம், ப்ரஹ்ம ஸூத்ர பாஷ்யம் என்ற மூன்று ப்ரஸ்தானங்களால் வெளிப்படுத்தியிருக்கிறார். அந்த அத்வைத தத்துவங்களையே ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகள் ’ப்ரஹ்மவிதாசீர்வாத பத்ததியில் எளிய நடையில் போதித்துள்ளார்.

உலகமே உண்மை; கடவுள் இல்லை என்று லோகாயதர்களும், உலகமும் இல்லை; கடவுளும் இல்லை என்று சூன்யவாதிகளான பௌத்தர்களும், உலகமும் உண்டு: கடவுளும் உண்டு என்று பலவிதமான த்வைத மதஸ்தர்களும் கூறுகின்றனர். கடவுள் தான் உண்மை; உலகம் பொய் என்பது உபநிஷத்துக்களில் கூறப்படும் அத்வைத ஸித்தாந்தம். இந்த அத்வைத உண்மை அநாதிகாலமாகவே ஜீவர்களிடமுள்ள அஜ்ஞானத்தினால் அதாவது அறியாமையாகிய இருளினால் மறைக்கப்பட்டு, த்வைதமாகிய பொய் உலகம் தெரிகிறது. கிளிஞ்சல், கயிறு முதலியவை மந்தாந்தகாரத்தால் மறைந்த சமயத்தில் அங்கே பொய்யான வெள்ளி ஸர்ப்பம் முதலியவை தோன்றவில்லையா? அதுபோலத்தான் இதுவும்.

த்வைதமாகிய பொய் உலகம் பலவிதமாகத் தோன்றும் பொழுது அதில் இது நல்லது. இது கெட்டது என்று இரண்டுவித எண்ணம் ஏற்படுகிறது. பிறகு நல்லது என்று தோன்றுவதில் ஆசையும், கெட்டது என்று தோன்றுவதில் துவேஷமும் உண்டாகின்றன. அந்த ராக த்வேஷங்களால் புண்ணிய பாவங்கள் என்று சாஸ்த்ரங்களில் கூறப்படும் பலவிதமான பிரவிருத்திகள் அதாவது செயல்கள் நடக்கின்றன. அதன் பின்பு புண்ய பாப ப்ரவிருத்திகளுக்குத் தக்கவாறு பலவித சரீரங்களை அடைதலாகிய பலவித ஜன்மம் ஏற்படுகிறது. அவ்விதச் சரீரங்களில் கர்மாநு குணமாகப் பலவாறான ஸுக துக்கங்களை ஜீவன் அநுபவிக்கிறான். இவ்வித ஸுக துக்க அநுபவமே ஸம்ஸார நிலை எனப்படும். இந்த ஸம்ஸார நிலை ஏழாவது படியாகும். 1. முதலாவது படி, அத்வைத தத்துவத்தின் அஜ்ஞானம். 2. த்வைத ப்ரபஞ்சத்தின் பொய்யான தோற்றம். 3. த்வைத உலகில் நல்லது கெட்டது என்ற அத்யாஸம் அதாவது ப்ரம்மம். 4. ராக துவேஷங்கள். 5. புண்ணிய பாவங்களில் பிரவிருத்தி. 6. பலவித ஜன்மம். 7. ஸுக துக்காநுபவமாகிய ஸம்ஸார நிலை. குருமுகமாகச் சாஸ்திர விசாரம் செய்து அத்வைத ப்ரஹ்ம தத்துவத்தை அநுபவித்து விட்டால் முதல் படியான அஜ்ஞானம் விலகும்; பிறகு வரிசையாக மீதிப் படிகளும் விலகிவிடும்; ஜீவன் முக்தியைப் பெறுவான் என்று அத்வைத சாஸ்திரங்கள் முறையிடுகின்றன.

த்வைதிகள், (1) அத்வைத தத்துவத்தின் அஜ்ஞானம், (2) பொய்யான த்வைத உலகின் தோற்றம் என்னும் இரண்டு படிகளை ஒப்புக்கொள்ளாதவர்களானபடியால், நல்லது கெட்டது என்னும் மித்யாஜ்ஞானம் என்ற மூன்றாவது படி முதற்கொண்டு மீதியுள்ள ஐந்து படிகளையே ஒப்புக்கொண்டு, வரிசையாக மித்யாஜ்ஞானம் விலகினால் ராகதுவேஷமாகிய தோஷம் விலகும். பிறகு ப்ரவிருத்தி போகும்; பின்பு ஜன்மம் துக்கம் இவை விலகும் என்று கூறுகின்றனர். அதனாலேயே அக்ஷபாத முனிவர் 'ந்யாய ஸுத்ரத்தில், दुःखजन्मप्रवृत्ति दोषमिथ्याज्ञानानामुत्तरोत्तरापाये तदनन्तरापायादपवर्गः என்ற ஸூத்ரத்தால் இந்தக் கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஸுகம், துக்கம், ராகம் துவேஷம், கர்த்ருத்வம் போக்த்ருத்வம் முதலிய தர்மங்களையுடைய அங்குரமும் ஒன்றாகத் தோன்றுவதே ஸச்சிதானந்த வடிவமான ஆத்ம ஸ்வரூபமும், ஒன்றாகத் தோன்றுவதே ஹ்ருதயத்திலுள்ள கிரந்தி எனப்படும். அது ஆத்ம ஸாக்ஷாத்காரத்தால் விலகட்டும் என்று ஆசீர்வதிக்கிறார்.

ஆத்ம ஸ்வரூபமானது ஸ்தூலம், ஸூக்ஷ்மம் என்னும் இருவித சரீரத்தைக் காட்டிலும் வேறானதா இல்லையா? அது கர்த்ருத்வம், போக்கருத்வம் முதலிய தர்மங்களையுடையதா இல்லையா? ஆத்மா ப்ரஹ்ம்மத்தைக் காட்டிலும் வேறா இல்லையா? தத்வஜ்ஞானம், கர்மம், உபாஸனம் இவற்றுடன் சேர்ந்து மோக்ஷ ஸாதனமா, தனியாகவா? ஆத்மா ஜ்ஞான ஸ்வரூபமா, ஜ்ஞான குணமுடையதா? நான் ப்ரஹ்மம் என்று புத்தியால் அறியக்கூடுமா, கூடாதா? அவ்விதம் ஆத்ம ஸாக்ஷாத்காரம் ஏற்பட்ட பிறகும் நாம் செய்யவேண்டிய காரியங்கள் உண்டா, இல்லையா? நாம் உயிருடன் இருக்கும்போதே முக்தி ஏற்படுமா, ஏற்படாதா? இந்தச் சரீரம் போன பிறகு வேறு ஜன்மம் உடனேயோ காலாந்தரத்திலோ வருமா, வராதா? இப்படி ஏற்படும் சந்தேகங்கள் எல்லாம் விலகட்டும், உண்மை விளங்கட்டும் என்று ஆசீர்வதிக்கிறார் :-

இவ்விதம் ஆத்ம ஸாக்ஷாத்காரம் ஏற்பட்ட பிறகு ஜீவன்முக்தன் பழைய வாஸனையால் செய்யும் கர்மங்கள் அவனிடம் ஒட்டுவதில்லையாகையால் அவனுக்கு ஆகாமி கர்மங்கள் இல்லை. ஜ்ஞானம் வருவதற்த முன் ஜன்மத்திலும் இதற்கு முந்திய பல ஜன்மங்களிலும் அவன் செய்த கணக்கில்லா கர்மாக்கள் எல்லாம் அவனது ஆத்மஜ்ஞானாக்கினியினால் பொசுக்கப்பட்டு விட்டபடியால் அவனுக்கு ஸஞ்சித கர்மங்கள் இல்லை. பிராப்தமான கர்மம் அநுபவத்தினால் நசித்து விடும்; ஆகையால் ஜ்ஞானிக்குப் பிராரப்த முடிவில் விதேஹ மோக்ஷம் ஸித்திப்பதில் சந்தேகமில்லை. இவ்விதம் மோக்ஷம் உனக்கு ஏற்படட்டும் என்று ஆசீர்வதிக்கிறார் :-

ஸகல வேதாந்தங்களுக்கும் அத்விதீயமான பரப்ரஹ்மத்திலேயே கருத்து என்று காட்டக்கூடிய உபக்ரமம், உபஸம்ஹரம் அதாவது ஆரம்பம், முடிவு இரண்டும் ஒரே விதமாய் வேதாந்தங்களில் இருப்பது முதலிய ஆறு வித அடையாளங்களைக் கொண்டு குருமுகமாய் வேதாந்த விசாரம் செய்வதாகிய ச்ரவணத்தால் ஜீவப்ரஹ்ம ஐக்யத்தில் ப்ரமாணமில்லை என்கிற ப்ரமாணாஸம் பாவனை விலகும். பிறகு அந்த விஷயத்தையே வேத ஸ் மதமான யுக்திகளால் தீர்மானித்தலாகிய மனனத்தால் ஜீவப்ரஹ்மைக்யமாகிய ப்ரமேயம் இல்லை என்ற ப்ரமேயாஸம்பாவனை விலகும். பின்பு மற்ற வஸ்துக்களை நினைக்காமல் ஆத்ம விஷயத்திலேயே சித்தத்தைச் செலுத்தி இடைவிடாமல் தியானிப்பதாகிய நிதித்பா ஸனத்தால் பிரபஞ்சமென்னும் விபரீத வஸ்துக்களின்

பாவனை அதாவது தோற்றம் விலகும். தூக்கம் என்னும் லயம் இல்லாமலும், விஷயங்களில் செல்லுதலாகிய விக்ஷேபம் இல்லாமலும், இரண்டும் இல்லாமல் சித்தம் கலங்கி நிற்கும் கஷாயாவஸ்தை இல்லாமலும், ஸமாதியில் ஏற்படும் ஸ்வல்ப ஸுகத்தில் ஈடுபாடாகிய ரஸாஸ்வாத நிலை இல்லாமலும், சித்தம் ஆத்ம ஸ்வரூபத்திலேயே லயித்து விருத்தி என்னும் பரிணாமமற்றதாய் இருந்தால் அப்பொழுது ஆத்ம ஸ்வரூபமானது உள்ளங்கை நெல்லிக்கனி போல் சித்தத்தில் நன்கு பிரகாசிக்கும். அப்பொழுது ஆத்மாவின் பார மார்த்திக ஸ்வரூபம் விளங்கும். ஆத்மா அழிவற்றது, விகாரமில்லாதது. பற்றுதலற்றது. இரண்டில்லாதது. எங்கும் நிறைந்தது. ஸ்வயம் ப்ரகாசமாயுள்ளது, அஹங்காரம் முதலிய அந்ருத ஜடதுக்கரூபப்ரபஞ்சத்தைக் காட்டிலும் வேறானது, ஸஜாதீய விஜாதீய ஸ்வகத பேதம் என்ற மூவித பேதமற்றது. ஸச்சிதானந்த ஸ்வரூபமானது, எங்கும் எப்போதும் எல்லாமாய் இருப்பதால் தேச கால வஸ்து பரிச்சேதமற்றது என்று ஆத்ம ஸ்வரூபம் நன்கு விளங்கும். அவ்விதம் அது உனக்கு விளங்கட்டும் என்று ஆசீர்வதிக்கிறார் :-

தூக்கமில்லாமலும் உலகத் தோற்றமில்லாமலும் இருக்கும் காலத்தில் ஏற்படும் ஸுகமே ப்ரஹ்மானந்தம். அதுவே ஆத்மாவின் வாஸ்தவமான ஸ்வரூபம். அது உனக்குப் பிரகாசிக்கட்டும் என்று ஆசீர்வதிக்கிறார்:-

இவ்விதமான ப்ரஹ் மாத்ம ஸாக்ஷாத்காரம் பரமேச்வரனுடைய பிரஸாதத்தாலும் குருவின் அநுக்கிரகத்தாலும் வரும்; ஆகையால் பரமேச்வரனை த்ருடமான அன்புடன் பஜிக்க வேண்டும். குரு சுச்ரூஷைகள் செய்ய வேண்டும். அந்த இருவர்களிடமும் உனக்கு த்ருடமான பக்தி ஏற்படட்டும் என்று ஆசீர்வதிக்கிறார்:-

இவ்விதமாக ப்ரஹ்மவித்தின் பல அரிய ஆசீர்வாத வசனங்களால் அத்வைத ஸித்தாந்த தத்துவங்களைச் சுலபமாக ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகள் வெளியிட்டு உலகத்துக்கு உபகரித்துள்ளார்கள். மோக்ஷ மூலகாரணமான ஜ்ஞானமென்பது அத்வைத தத்வஜ்ஞானமேயாகும். மற்றது அஜ்ஞானமே. இந்தக் கருத்தையே, **एतत् ज्ञानमिति प्रोक्तमज्ञानं यदतोऽन्यथा** என்று பகவான் கீதையில் வெளியிட்டிருக்கிறார்.

அந்த ஜ்ஞானத்தை அடைவதே மனிதனுக்கு மேன்மையளிக்கும். இதையே **ज्ञानं हि तेषामधिको विशेषः** என்று பெரியோர்கள் கூறியுள்ளார்கள். ஆகையால் இவ்வித ஜ்ஞானத்தை அடைந்து, கிடைக்கத்தகாத நமது மனித ஜன்மத்தை ஸ பலமாக்கிக் கொள்ள வேண்டும் என்று பெரியோர்கள் நமக்கு உபதேசித்துள்ளார்கள். அவ்விதம் நாம் நடப்போமாக.

# முகாம் நிகழ்ச்சிகள்



***8.12.21 புதன் கிழமையன்று*** *மூன்று கால பூஜையை முடித்துக் கொண்டு ஒரிக்கயில் இருந்த நீண்ட முகாம் மாலை புறப்பட்டு திருப்பதி அலுப்பிரி பாதுகா மண்டபம் வந்தடைந்தது.*

***09.12.21 வியாழன்*** *முதல் பாதுகா மண்டபத்தில் ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் பூஜை ஆரம்பமாகியது.*

***14.12.21 செவ்வாய்*** *கிழமை திருமலையில் ஸ்ரீ வெங்கடாசலபதி தரிசனம், ஸ்ரீ பெரியவாளுக்கு கோவில் மரியாதை செய்தார்கள். ஸ்ரீ ஆஞ்சநேயர் கோவில் எதிரில் வழக்கம் போல் ஸ்ரீ பெரியவாள் அவர்களுக்கு மேள தாளங்கள் குடை முதலியவைகளுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது. அடுத்தப்படியாக ஸ்ரீ வாரி சடாரி பல்லக்கில் எடுத்து வரப்பட்டு பஞ்ச முத்ரையுடன் ஸ்ரீ பெரியவாள் அவர்கள் வரவேற்கப்பட்டார்கள். நேராக முகத்வாரம் வழியாக சன்னதிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு பிரத்யேகமான எல்லா விவரங்களையும் எடுத்துரைத்து மூலஸ்தானத்தில் இருக்கும் எல்லா விக்ரஹங்களுக்கும் ஆரத்தி செய்யப்பட்டது. பிறகு கர்ப்பக்கிருஹத்திற்கு ஸ்ரீ பெரியாவாளை வரவேற்று ஸ்ரீ வெங்கடாசலபதி ஸ்வாமிக்கு சாமரம் வீசினார்கள். மறுபடியும் ஒரு ஆரத்தி எடுக்கப்பட்டது. ஸ்ரீ பெரியவாள் சன்னிதியில் சுமார் 40 நிமிடங்கள் அமர்ந்திருந்து தரிசனமும் தியானமும் செய்தார்கள். சுமார் 150 பக்தர்கள் ஸ்ரீ பெரியவாள் அவர்களுடன் ஸ்வாமி தரிசனம் செய்து கொண்டார்கள்.*

***17.12.21 வெள்ளிக்கிழமை*** *முதல் திருப்பதி அலிப்பிரி புதிதாக நிர்மாணம் செய்யப்பட்டுள்ள பாதுகா மண்டபத்தில் தனுர்மாத பூஜை தொடங்கியது. முன்பு*

இருந்த கட்டிடத்தை இடித்து ஸ்ரீ சந்திரமௌளீஸ்வரர் நைவேத்யம் முதலியன வைக்கும், பக்தர்கள் தரிசனத்திற்கும் சௌகரியமாக புதிய கட்டிடத்தை திருப்பதி ஸ்ரீ கைலாஷ் அவர்கள் சிறப்பாக நிர்மாணம் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

***30.12.21*** *ஸ்ரீ மஹாஸ்வாமிகள் ஆராதனை வைதீகமாக ஸ்ரீ மடத்தில் நடத்தப்பட்டது. ஆசார்ய ஸ்வாமிகள் 3 கால பூஜையை முடித்துக் கொண்டு திருப்பதியிலிருந்து காஞ்சிபுரம் காலை 10.30 மணியளவில் வந்தடைந்தார்கள். ஆராதனையை முன்னிட்டு மூன்று நாட்கள் நடைபெற்ற வேத சாஸ்திர சதஸில் மற்றும் வேத பாராணயத்தில் பங்கேற்றவர்களுக்கு சம்பாவனை செய்தார்கள். முன்னதாக காலை 9.00 மணி அளவில் ஆராதனை ப்ராம்மணர்களுக்கு வஸ்திரம் வழங்கி, ஸ்ரீ ஏகாம்பரநாதர் திருக்கோவில் வளாகத்தில் இருக்கும் குளத்தில் (கம்பா நதி) ஸ்நானம் செய்து அங்கிருந்து பசுமாடு, குடை, தீவட்டி, கௌரிகாளை, வேதகோஷம் மங்கள வாத்தியத்துடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்கள். 1.30 மணி அளவில் அதிஷ்டானத்தில் தீர்த்த நாராயண பூஜை நடைபெற்றது. ஸ்ரீ ஆராதனை ப்ராமணர்களுக்கு மரியாதை செய்யப்பட்டு சம்பாவனையும் அளிக்கப்பட்டது.*

*முன்னதாக ஏகாதச ருத்ர ஜபம், ஹோமம் நடைபெற்றது. கலச தீர்த்தங்களை ஆசார்ய ஸ்வாமிகள் அதிஷ்டானத்தில் அபிஷேகம் செய்தார்கள்.*

*ஆராதனை முடிந்து ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் காஞ்சிபுரத்திலிருந்து கிளம்பி திருப்பதி சென்றடைந்தார்கள். ஸ்ரீ மடம் முகாம் திருப்பதியில் தொடர்கிறது.*

இனி கவலே வேண்டாம். 50, 70, வருடங்களுக்கு முன் உள்ள பழைய
(Reprint or Letterpress Books)
**ஸம்ஸ்க்ருத, தமிழ், க்ரந்தம், கந்நடம், தெலுங்கு,** etc.
ஆகிய எல்லா மொழிகளிலுள்ள புத்தகங்களே
புதிய Fontல் அச்சிட்டுதரப்படும்.
(Without Re-typeing, no proof reading)
விவரங்களுக்கு : **V.K.N. Enterprises, Mylapore,**
**Chennai-600004, Cell : 9840217036, vknprinter@gmail.com**
*We reprint old books without retyping ! Books of 50,70 etc. years can be reprinted with new fonts in all languages.*
Sanskrit, Tamil, Grantham, Telugu, English, Kannada, Malayalam, Hindi etc.
Contact above address.

# ப்ரபோத சிந்தாமணி

ஆயுஷ்மன்

சார் இப்பவே எனக்கு டயபடீஸ் ஹை ஹ பெர்டென்ஷன், ஒண்ணும் முடியல்ல. இப்படி சில பேர். இன்னும் சிலர் வேலைப் பளு காரணமாக அதீத உழைப்பு.

மன நலம் பாதிப்பட்ட்டு அவஸ்தை படுகிறார்கள். காலை எழுந்ததிலிருந்து இரவு படுக்கப் போகும் வரை பரபரப்பான வாழ்க்கை. மருத்துவ செலவுகள் ஏறி கொண்டே போகின்றன.. பிறப்பிலிருந்தே வரும் நோய்களைத் தவிர மற்ற நோய்கள் எல்லாம் மனிதனால் ஏற்படுத்தப்பட்டவையே.

சுமார் 60% நோய்கள் இன்றைய சூழ் நிலைகளால் ஏற்படும் நோய்களே என்று உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது. இதை தடுக்காவிடில் வரப்போகும் இளம் தலைமுறை மிகவும் பாதிக்கப்படும் என்றும் எச்சரிக்கிறது. அனைத்து வ்யாதிகளுக்கும் காரணம் ஆரோக்யமின்மை. அதற்குக் காரணம் அனாரோக்யமான உணவு. ஆரோக்யம் என்பது என்ன ?

**''ஸமதோஷ: ஸமாக்கினிச்ச ஸமதாது மலக்ரிய:**
**ப்ரஸன்னாத்மேந்த்ரியச்ச ஆரோக்யம் இதி உச்யதே''** இவ்வாறு சுஸ்ருத மகரிஷி கூறுகிறார். நம் உடலில் தாதுக்கள் அக்னி தோஷங்கள் மலக்ரியை இவை ஸமமாய் இருக்க வேண்டும். இந்த்ரியங்களும் மனதும் ப்ரஸன்னமாக இருக்க வேண்டும்.

இந்த ஆரோக்யத்தை நாம் மூன்று விதமாகப் பிரிக்கலாம் 1. Physical Health, 2. Mental Health, 3. Spiritual Health. நாம் இருக்கும் சூழ்நிலையில் மேற் கூறிய எந்த ஹெல்தும் நம்மிடமில்லை. இதற்குக் காரணம் நாம் தான். சூழ்நிலையையும் கெடுத்து நம்மையும் கெடுத்துக் கொண்டவர்கள் நாம். நமது மகரிஷிகள் நிறைய உபதேசம் செய்துள்ளார்கள். அது மட்டுமல்ல. ஆரோக்யமான வாழ்க்கையயை வாழ்ந்தும் காட்டியுள்ளார்கள். ஆரோக்யம் அடைவதற்கு ஸ்ரீ க்ருஷ்ணர் காட்டிய வழியைப் பார்ப்போம்.

**''யுக்தாஹார விஹாரஸ்ய யுக்தசேஷ்டஸ்ய கர்மஸு யுக்தஸ்வப்னாவபோதஸ்ய யோகோ பவதி துக்கஹா'' பகவத் கீதை (6-17)**

1. நாம் உண்ணும் உணவு சரியான அளவில் சாத்வீகமாக இருக்க வேண்டும்.

2. சரியான அளவில் ப்ராணாயாமம், உடற்பயிற்சி

3. சரியான அளவில் தூக்கம், விழிப்பு நாம் இதில் ஏதேனும் ஒன்றையாவது பின்பற்றுகிறோமா? உணவு அளவும் சரியில்லை, ஸாத்வீகமும் இல்லை, சரியான சமயமும் இருப்பதில்லை. அமெரிக்க கம்பெனிகளில் வேலை செய்பவர்கள் தூக்கத்தைத் தொலைத்து திண்டாடுகிறார்கள். செல்போன் மூலமாக நம்மை அழித்துக் கொண்டிருக்கிறோம் என்பது பல பேருக்குத் தெரிவதில்லை. ஏதோ சிலர் ப்ராணாயாமம் யோகா செய்கிறார்களே தவிர பெரும்பாலான மக்கள் செய்வதில்லை.

கீதை சொல்லும் பாதையை அனுசரித்து அல்லதை விலக்கி நல்லதை சேர்த்து வாழ்ந்தால் ஆரோக்யம் நம் கையில். இந்தப் ப்ரபோதம் நமக்கு வர வேண்டும்.

ஸ்ரீ சந்திரமௌலீஸ்வராய நம:



ஸ்ரீ மடத்தில் ஸ்வர்ண ரத சேவை ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் பிருந்தாவனத்தில் ப்ரதி மாதம் கீழ்கண்ட நக்ஷத்ரங்களில் நடைபெறும்

♦ அனுஷம் ♦ மூலம் ♦ உத்ராடம் ♦ அவிட்டம்

இந்த சேவையில் ரூபாய் 1000 செலுத்தி உபயதாரர்களாக கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் ஸ்ரீமடம் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு:**

ஸ்ரீமடம் மேனேஜர் - 044 - 27222115, 27222707, 27224236

இப்படிக்கு,
ஸ்ரீமடம் நிர்வாகம்

# பீஷ்மஸ்தவராஜம் - 13

*வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்*

नमो नरकसम्त्रासरामण्दलकारिणे ।
सम्सारनिम्न्गावर्ततरिकाष्टाय विष्णवे ।।

**நமோ நரகஸம்த்ராஸரக்ஷாமண்டல காரிணே ।**
**ஸம்சார நிம்னகாவர்ததரிகாஷ்டாய விஷ்ணவே ॥**

*நரக பயத்திலிருந்து காப்பாற்றும் நிலையே, ஸம்ஸாரக் கடலில் மூழ்குபவர்க்கு கறையேற்றத் துணை நிற்கும் தெப்பமே, உமக்கு நமஸ்காரம்.*

नमो ब्रह्मण्यदेवाय गोबाह्मनहिताय च ।
जगत् हिताय क्रुष्णाय गोविन्दाय नमो नम: ।।

**நமோ ப்ரம்மண்ய தேவாய கோபாராம்மண ஹிதாய ச ।**
**ஜகத் ஹிதாய க்ருஷ்ணாய கோவிந்தாய நமோ நம: ॥**

*அந்தணர்தம் தேவே பசு, அந்தணர்க்கு நன்மை செய்பவரே உலகிற்கு இதமானவரே க்ருஷ்ணா, கோவிந்தா உனக்கு நமஸ்காரம்.*

प्राणाकान्तारपाथेयम् सम्सारच्छेदभेषजम् ।
दु: खशोकपरित्राणम् हरिरित्क्षरद्वयम् ।।

**ப்ராணகாந்தாரபாதேயம் ஸம்ஸாரச்சேத பேஷஜம் ।**
**துக்கசோகபரித்ராணாய ஹரிரித்யக்ஷரட்வயம் ।**

*உயிர்வழி பயணத்தின் கட்டுச் சோறு பகவான். ஸம்ஸாரச் சேதமாகிய மருந்து அவன். துக்கம், சோகம் இவைகளினின்று காப்பாற்றுபவன். பகவான் ஹரி எனும் இரெண்டெழுத்து அவனே.*

यथा विष्णुमयम् सत्यम् यथा विष्णुमयम् जगत् ।
यथा विष्णुमयम् सर्वम् पाप्मा मे नश्यताम् तथा ।।

**யதா விஷ்ணுமயம் ஸத்யம் யதா விஷ்ணுமயம் ஜகத் ॥**
**யதா விஷ்ணுமயம் ஸர்வம் பாப்மா மே நஸ்யதாம் ததா ।**

*எப்படி ஸத்யம் விஷ்ணு மயமோ, எப்படி உலகம் ஸத்யமயமோ, எப்படி எல்லாம் விஷ்ணு மயமோ, அப்படியே என் பாபங்களை போக்கடிக்கட்டும்.*

त्वाम् प्रपन्नाय भक्ताय गतिमिष्टाम् जिगीषवे ।
यच्श्रेय: पुण्डरीकाक्षाय तद् ध्याययस्व सुरोत्तम ।।

**த்வாம் ப்ரபன்னாய பக்தாய கதிமிஷ்டாய ஜிகீஷவே ।**
**யச்ஸ்ரேய: புண்டரீகாட்ச தத் த்யாயஸ்ய ஸுரோத்தம ॥**

*உன்னை சரணாகதி அடைந்த உன் பக்தனான எனக்கு இஷ்டமான நிலையை ஆசைப்பட்டால் ஹே தாமரைக்கண்ணா! ஹே தேவோத்தமா எது எனக்கு நிரந்தரமான புகழைத் தருமோ அதைக் கொடுக்க நினைப்பாயாக.*

इति विध्यातयोयोनिरयोनिर्विष्णुरीडित: ।
वाग्यग्येनार्वितो देव: प्रीयताम् मे जनार्दन: ।।

**இதி வித்யாதபோயோனிரயோனிர் விஷ்ணுரீடித: ।**
**வாக்யஞ்யேனார்சிதோ தேவ: ப்ரீயதாம் மே ஜனார்தன: ॥**

*வித்யை தவம் இவைகளின் நிலையமாய் தனக்கோர் பிறவி இல்லாதவனாய் விஷ்ணுவானவர் துதிக்கப்பட்டார். வாக் என்னும் வேள்வியால் அர்ச்சிக்கப்பட்ட ஜனார்தனர் இதனால் ப்ரீதி அடையட்டும்.*

नारायण परम् ब्रह्म नारायणपरम् तप: ।
नारायणो परो देव: सर्वम् नारायण: सदा ।।

**நாராயண: பரம் ப்ரம்ம நாராயணபரம் தப; ।**
**நாராயணோ பரோ தேவ: ஸர்வம் நாராயண: ஸதா ।।**

*நாராயணனே பரம், ப்ரம்மம், நாராயணனையே எல்லையாய் உடையது தவம். நாராயணனே பரம் தேவன், எப்பொழுதும் எல்லோரும் நாராயணனே.*

(தொடரும்)

# ஸ்ரீமத் தேவி பாகவதம் -19

பி. ஆர். கண்ணன்

***ஸ்கந்தம் 8***

***ஸ்வாயம்புவ மனு***



*ஸ்ரீமத்தேவி பாகவதத்தின் 8 வது ஸ்கந்தத்திலிருந்து ஆரம்பித்து நாராயணரிஷி நாரதருக்கு உபதேசித்ததாக அமைந்துள்ளது.*

*பிரம்மதேவரின் ஆக்ஞைப்படி முதல் மனுவாகிய ஸ்வாயம்புவ மனு ஸ்ருஷ்டிசெய்வதற்கு முன் தேவியை நோக்கி தபஸ் செய்து, ஸ்தோத்திரித்தார். தேவி அனுக்ரகித்தாள். ஆனால் பூமியே இல்லாததைக்கண்டு மனு வருந்தினார். ஏனெனில் பூமியை ஹிரண்யாக்ஷன் ஸமுத்திரத்திற்கடியில் ஒளித்துவைத்திருந்தான். பிரம்மாவின் பிரார்த்தனைப்படி, அவருடைய மூக்கிலிருந்து வராஹாவதாரம் எடுத்து விஷ்ணுவானவர் வெளிவந்தார். யக்ஞமே ஸ்வரூபமாக இருந்த வராஹர் பர்வதாகாரமாக மாறி, ஸமுத்திரத்திற்கடியில் சென்று, ஹிரண்யாக்ஷனை வதம் செய்து, பூமியைத் தன் மூக்கின்மீது வைத்து, அழகாக மேலே கொண்டுவந்து பழைய நல்ல உறுதியான நிலையில் நிறுத்தினார்.*

*ஸ்வாயம்புவ மனுவின் புத்திரன் ப்ரியவ்ரதன், பூமியின் ஒரு பக்கம் எப்போதும் சூரியஒளி இல்லாது இருளில் மூழ்கியிருப்பதால், தன் சூரியன்போன்ற ஒளிமிக்க ரதத்தைச் செலுத்தி, பூமியை ஏழு தடவை பிரதக்ஷிணமாகச் சுற்றிவந்தார். ரதத்தின் சக்கரத்தினால் ஏழு பள்ளங்கள் உண்டாயின; அவைதான் ஏழு ஸமுத்திரங்கள்; ஏழு பூமிபாகங்கள் ஏழு தீவுகளாயின. அவை: உப்புஸமுத்திரம் - ஜம்புத்வீபம்; இக்ஷுரஸம் (கரும்புச்சாறு) - ப்லக்ஷத்வீபம்; ஸுரோததி - சால்மலி; க்ருதம் (நெய்) - குசத்வீபம்; க்ஷீரம் (பால்) - க்ரௌஞ்சம்; ததி (தயிர்) - சாகத்வீபம்; சுத்தோதகம் (தூயநீர்) - புஷ்கரத்வீபம். இந்தத்தீவுகள் முந்தியதைப்போல் அடுத்தது இருமடங்கு பெரியது. ப்ரியவ்ரதன் ஏழு த்வீபங்களை தன் ஏழு புத்திரர்களுக்குக் கொடுத்துவிட்டு, யோகமார்க்கத்தில் இறங்கி, முக்தியடைந்தார்.*

**லோகங்களின் அமைப்பு:**

*ஜம்புத்வீபம் ஒரு லக்ஷ யோஜனை பரிமாணம் கொண்டது. இதில் ஒன்பது வர்ஷங்கள், ஒவ்வொன்றும் 9000 யோஜனைகள் கொண்டது; மலைகளால் பிரிக்கப்பட்டுள்ளன. ஜம்புத்வீப மத்தியில் ஸுமேரு பர்வதம் உள்ளது. மத்தியில் இருக்கும் இலாவர்ஷத்திற்குத் தெற்கே ஹரி, கிம்புருஷம், பாரதம் ஆகியவர்ஷங்களும், கிழக்கே பத்ராஸ்வ வர்ஷமும், மேற்கே கேதுமாலவர்ஷமும், வடக்கே ரம்யகம், ஹிரண்யம், குரு ஆகிய வர்ஷங்களும் அமைந்துள்ளன. இவ்வாறாக ஒன்பது வர்ஷங்கள். பாரதவர்ஷத்தின் பிரதானமான நதி கங்கை. பிரம்மலோகத்திலிருந்து விஷ்ணுவின் பாததீர்த்தமான கங்கை நான்கு கிளைகளாக ஆகி - ஸீதா, சதுஸ், அலக்நந்தா, பத்ரா - பாய்கிறது. அலக்நந்தா பிரம்மலோகத்தின் தென்பாகத்திலிருந்து, ஹேமகூடமலை வந்து, பாரதவர்ஷத்தில் கங்கையாக, பாகீரதியாக வருகிறது. கங்கையில் ஸ்னானம் செய்யக்கிளம்பின மாத்திரத்திலேயே, அடிக்கு அடி, ராஜஸூய, அஸ்வமேதாதி யாக பலன் கிடைக்கிறது. பாரதவர்ஷம் கர்மக்ஷேத்திரம். பாக்கி எட்டு வர்ஷங்களும் பூமியிலேயே ஸ்வர்க்க சுகம் அளிப்பன. எல்லா வர்ஷங்களிலும் விஷ்ணு ஒவ்வொரு மூர்த்தியாக உபாஸிக்கப்படுகிறார். பாரதவர்ஷத்தில் நாரதர் ஆதிபுருஷர் நாராயணனைப் பூஜிக்கிறார். பாரதத்தின் பெருமையினால் இங்குள்ளவர் அல்பாயுஸிலேயே பகவானை அடையமுடிகிறதே என்று ஸ்வர்க்கவாசிகள் பொறாமைப்படுகின்றனர்.*

*லோகாலோக பர்வதம் சூரியனால் ஒளி பெறும் பூமி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம் ஆகிய லோகங்களையும், ஒளிபெறாத லோகங்களையும் பிரிக்கும் வகையில் அமைந்துள்ளது. சூரியன் மற்ற கிரகங்களுடன் ஸுமேரு பர்வதத்தைச்சுற்றி பிரதக்ஷிணம் செய்கிறார். உத்தராயணத்தில் ஆரோஹணம், மந்தகதி, பகல்பொழுது நீண்டது. தக்ஷிணாயனத்தில் அவரோஹணம், வேககதி, பகல் குறுகியது. பாலகில்யர் முதலான 60000 ரிஷிகள், கட்டைவிரல் அளவு உள்ளவர்கள், சூரியனின் எதிரில் வேதகோஷம் செய்கின்றனர். ஸந்தியாகாலங்களில் சரியான காலத்தில் அர்க்யப்ரதானம் செய்து, மந்தேஹ அசுரர்களின் தாக்குதலிலிருந்து சூரியனைக் காக்கின்றனர். சூரியனின் ரதத்தின் ஏழு குதிரைகள் வேதத்தின் சந்தஸ்களாவன - காயத்திரி, உஷ்ணிக், அனுஷ்டுப், பிருஹதீ, பங்க்தி, த்ருஷ்டுப், ஜகதி. ரதத்தின் ஸாரதி அருணன் - கருடனின் அண்ணா. ஒவ்வொரு மாதமும் சூரியனை ஏழு குழுக்கள் - 2 ரிஷி, 2 கந்தர்வர்கள், 2 அப்ஸரஸ், 2 நாகர்கள், 2 யக்ஷர்கள், 2 ராக்ஷஸர்கள், 2 தேவதைகள் ஆகிய குழுக்கள் - உபாஸிக்கின்றனர்.*

*சந்திரன் ஓஷதிகளின் அதிபதி. நாம் உண்ணும் தானியங்களுக்கு ஊட்டசக்தியை அளிப்பவர். 16 கலைகளுடன் விளங்குபவர்; சுக்லபக்ஷம் தேவர்களுக்கும்,*

கிருஷ்ணபக்ஷம் பித்ருக்களுக்கும் சந்தோஷம் அளிப்பவை. சந்திரனுக்குமேல் நக்ஷத்திரங்கள் - அபிஜித் சேர்த்து 28 நக்ஷத்திரங்கள் உள்ளன. நக்ஷத்திரங்களுக்குமேல் கிரகங்கள் - சுக்ரன், புதன், செவ்வாய், ப்ருஹஸ்பதி, சனி. சனிக்குமேல் ஸப்தரிஷி மண்டலம்; ஸப்தரிஷிகள் த்ருவலோக பிரதக்ஷிணம் செய்கிறார்கள். இந்த ஜோதிமண்டலத்தை ஜ்யோதிஸ்சக்ரம், அல்லது சிசுமார சக்ரம் (பெருமீன் வடிவம்) என்பர். இந்த பெருமீனின் நுனியில் த்ருவன்; மத்தியில் ப்ரஜாபதி, அக்னி, இந்த்ரன், தர்மர்; அடியில் பிரம்மா. விஷ்ணுவின் ஸர்வதேவமயமான விக்ரகமே இந்த சிசுமாரம். சூரியனுக்குக்கீழே ராகு. சூரியசந்திரர்களின் பாதுகாப்பிற்காக விஷ்ணு சுதர்சன சக்கிரத்தை அங்கு ஸ்தாபித்துள்ளார். ராகுவின் கீழே, ஸித்த, சாரண, வித்யாதர லோகங்கள்; அவற்றின்கீழே யக்ஷ, ராக்ஷஸ, பிசாச லோகங்கள். அதன் கீழே அந்தரிக்ஷம்- வாயு, மேகங்களின் எல்லை.

பூமிக்குக்கீழே, ஏழு லோகங்கள் - அதல, விதல, ஸுதல, தலாதல, மஹாதல, ரஸாதல, பாதால; இவை ஸ்வர்க்கத்தைவிட சுகமானவை. தைத்ய, நாக, தானவர்கள் இருக்கும் உலகங்கள். பெரிய நாகங்களின் சிரஸின் மணி ஒளியினால் எப்போதும் வெளிச்சம். இவ்வுலகங்களுக்குக் கீழே அனந்தன் (சேஷன்- ஸங்கர்ஷணன்) 1000 தலைகளுடன் இருக்கிறார். பூமண்டலத்தை தன் தலைமேல் ஒரு கடுகுபோல் தாங்குகிறார். பித்ருலோகம் பூமிக்குக் கீழே, அதலலோகத்திற்குமேல் தென்திசையில் உள்ளது; அக்னிஷ்வாத்தா முதலிய பித்ருதேவதைகள் இருக்குமிடம்.

**கர்மகதி**

ஸத்வகுணத்தினால் சுகமும், ராஜஸகுணத்தினால் துக்கமும், தாமஸகுணத்தினால் துக்கமும், மூடத்தனமும் ஸம்பவிக்கின்றன. புண்யபலத்தினால் ஸ்வர்க்கமும், பாபமிகுதியினால் நரகமும், புண்ய, பாப சேர்க்கையினால் பூலோகமும் ஜீவனுக்கு ஸித்திக்கின்றன. நரகங்கள் 21 அல்லது 28 என்று கூறப்படுகின்றன. அங்கு ஜீவனுக்கு உயிர்போகாமல் துன்பத்தை கடுமையாக அனுபவிப்பதற்காகவே யாதனா சரீரம் என்ற ஒன்றைத் தருகிறார்கள். உதாரணமாக, கும்பீபாக நரகத்தில் மிருகங்களின் மாமிசத்தை உண்டவர்களை கொதிக்கும் எண்ணையில் இடுகிறார்கள். ரௌரவ நரகத்தில் பிராணிகளுக்கு த்ரோகம் செய்தவர்களை, அந்த ப்ராணிகளே ருரு என்ற மிருகங்களாக வந்து குத்திக்கொதறும்படியாகச் செய்கின்றனர். தப்தஸூர்மி நரகத்தில் பரஸ்த்ரீ அல்லது பரபுருஷனுடன் சேர்ந்தவர்களை, காய்ச்சிய இரும்பினாலான ஸ்த்ரீ, புருஷ உருவத்தை ஆலிங்கனம் செய்யவைக்கிறார்கள். அஸிபத்ரவன நரகத்தில் வேதமார்க்கத்தை விட்டவர்களை, கூர்மையான இலை நுனிகளால் ஹிம்ஸிக்கிறார்கள்.

தேவி உபாஸனையின் மூலமே, நரகபயம் இல்லாமல், ஸம்ஸார சக்ரத்திலிருந்து விடுதலை பெற முடியும். பலவிதமான தேவிபூஜாமுறைகளை இங்கு வ்யாஸர் விளக்குகிறார். சுக்லபக்ஷ ப்ரதமை முதல் பௌர்ணமி வரை தினமும் பூஜையில் செய்யவேண்டிய நைவேத்தியங்கள், தானங்கள், அதைக்கொண்டே ஹோமங்கள், அதன் பலன்கள்; இதுபோலவே, ஒவ்வொரு கிழமையிலும், ஒவ்வொரு நக்ஷத்திரத்திலும், ஒவ்வொரு யோகத்திலும், ஒவ்வொரு கரணத்திலும் செய்யும் பூஜை நைவேத்தியங்கள் முதலானவற்றின் விவரத்தை அளித்துள்ளார். முக்கியமாக ஒவ்வொரு மாத சுக்லபக்ஷ த்ருதீயையில் செய்யவேண்டிய பூஜை, நைவேத்தியங்களை அருளியுள்ளார்.

இலுப்பை மரத்தில் அம்பாளை ஆவாகனம் செய்து ஸ்தோத்திரம், நாம ஸங்கீர்த்தனம் செய்தால் ஸகலமங்களமும் ஸித்திக்கும். **பரமா பாபஹந்த்ரீ ச பரமார்கப்ரதாயிநீ । பரமேஸ்வரீ ப்ரஜோத்பத்தி பரப்ரஹ்மஸ்வரூபிணீ ।।** 'தேவியே, நீ எல்லாவற்றிற்கும் மேலானவள்; ஸகலபாபங்களையும் அழிப்பவள்; உயர்ந்ததான முக்தி மார்க்கத்தில் வழிநடத்துபவள்; பரமேஸ்வரி; ப்ரஜாஸந்ததி உன் அருளே; பரப்ரஹ்ம ஸ்வரூபமாகவே இருப்பவள்.'

*(வளரும்)*

ஜய ஜய சங்கர    உ    ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

### சீடர்களின் கவனத்திற்கு


ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

''ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன், ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்''

# தை மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|
| *14/01/2022* | வெள்ளி | உத்தராயண புண்ய காலம், தை பொங்கல், மகரஸங்க்ராந்தி |
| *15/01/2022* | சனி | சனி மஹா ப்ரதோஷ பூஜை, மாட்டுப் பொங்கல் |
| *17/01/2022* | திங்கள் | பௌர்ணமி பூஜை |
| *18/01/2022* | செவ்வாய் | தை பூசம் |
| *26/1/2022* | புதன் | ஸ்வாதி வேத பாராயணம் |
| *27/1/2022* | வியாழன் | அனுஷம் தேர், அனுஷம் வேத பாராயணம் |
| *28/01/2022* | வெள்ளி | ஏகாதசி |
| *29/01/2022* | சனி | துவாதசி |
| *29/1/2022* | சனி | மூலம் வேத பாராயணம், மூலம் தேர் |
| *30/01/2022* | ஞாயிறு | ப்ரதோஷ பூஜை |
| *31/1/2022* | திங்கள் | உத்ராடம் தேர், உத்ராடம் வேத பாராயணம் |
| *02/2/2022* | புதன் | அவிட்டம் வேதபாராயணம், அவிட்டம் தேர் |
| *07/2/2022* | திங்கள் | ரதஸப்தமி |
| *08/2/2022* | செவ்வாய் | பீஷ்மாஷ்டமி |
| *12/2/2022* | சனி | ஏகாதசி |
| *14/01/22, 21/01/22, 28/01/22, 04/02/22 - 11/02/22* வெள்ளிக்கிழமை பூஜை | | |

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி



பெரியவா சிவாஸ்தானத்தில் இருந்த சமயம். 12 வயது நிரம்பிய பாலகன் உபநயனம் ஆகாதவன் சென்னையிலிருந்து வந்தவன் கண்ணீர் மல்க பெரியவாளிடம் சொன்னான். எனக்கு அப்பா இல்லை. என் தாயாரும், தமக்கையும் பம்பாயில் ஒரு வீட்டில் இருக்கிறார்கள். அந்த வீட்டில் அம்மா சமையல் வேலை செய்கிறார்கள். நான் கிரிஸ்தவ கான்வென்டில் 8ஆம் க்லாஸ் படிக்கிறேன். நான் நிறைய மார்க்குகள் வாங்குகிறேன். என்னைக் க்ரிஸ்துவ மதத்தில் சேருமாரும் எம். ஏ. வரை படிக்க வைத்து வேலை வாங்கித் தருவதாகவும் சொல்கிறார்கள்.

நான் மதம் மாற மாட்டேன். எனக்கு உபநயனம் ஆக வேண்டும். நாலு மாசமா அம்மாவிடமிருந்து கடிதம் வரவில்லை, என் தாயும், தமக்கையும் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை என்று சொன்னான். ஸ்வாமிகள் அவனை சிவாஸ்தானத்திலேயே இருக்கச் சொன்னார்கள். 10, 15 நாட்கள் சென்றன. மும்பையிலிருந்து சுமார் 40 பேர் பெரியவாளை தரிசனம் செய்து கொள்ள வந்தார்கள் தரிசனம் முடிந்து கிளம்பிவிட்டனர். திடீரென்று பெரியவா அவர்களை அழைத்து ஒவ்வொருவரையும் தத்தம் பெயரைச் சொல்லச் சொன்னார்கள். ஒரு நபர் தன் பெயரைச் சொன்னவுடன் அந்தப் பையனை அழைத்து வந்து அவன் கதையைச் சொல்லச் சொன்னார்கள். அதைக் கேட்ட அந்த நபர் அவனுடைய தாயார் தான் தன் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்ததாகவும், அவள் காலமாகி நாலு மாதங்கள் ஆகிவிட்டன, கான்வென்டில் தகவல் கேட்க அவர்கள் எதுவும் தரவில்லை என்றும் அவனுடைய தங்கையைக் கொண்டே தாயாருக்கு ஸம்ஸ்காரங்கள் செய்யப்பட்டன

என்றும் கூறினார். மேலும் சென்னையில் இவன் படிக்கும் கான்வென்டிற்குச் செல்ல நினைத்திருப்பதாகவும் பெரியவா அனுக்ரஹத்தில் அவன் இங்கேயே கிடைத்து விட்டதாகவும் உணர்ச்சி வசப்பட்டு சொன்னார்.

பெரியவா '' நீ இந்தப் பையனை அழைச்சுண்டு போய் உபநயனம் செய்து வைத்து தாயாரின் ஸம்ஸ்காரங்களையும் செய்து வை. அவன் தங்கையின் விவாஹத்தையும் நடத்தி வை இது உன் கடமை '' என்று அருளினார்கள். என்னே பெரியவாளின் திவ்ய த்ருஷ்டி.

(தொடரும்)


# ''ஸ்ம்ருதி முக்தாபலம்'' என்னும் வைத்தியநாத தீக்ஷிதீயம்

அரிய தர்மசாஸ்திர புத்தகத் தொகுப்பு எளிய தமிழ் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.

1. வர்ணாஸ்ரம தர்மகாண்டம், 2. ஆஹ்னிககாண்டம் பூர்வபாகம், 3. ஆஹ்னிக காண்டம் உத்தரபாகம், 4. ஆசௌச காண்டம், 5. ஸ்ராத்தகாண்டம் பூர்வபாகம், 6. ஸ்ராத்த காண்டம் உத்தரபாகம், 7. திதிநிர்ணயகாண்டமும் ப்ராயச்சித்த காண்டமும் என்ற 7 பாகங்கள் சேர்த்து மிகக்குறைந்த விலையில் கிடைக்கப் பெறுகின்றது. ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் வாங்கி பயன் பெறலாம்.




ஏழு தொகுதிகள் அடங்கிய ஒரு செட் விலை 2500

கூரியர், தபாலில் பெற மேலும் 500 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்

தொடர்பு கொள்ளவேண்டிய அலைபேசி எண்கள்

9600543996, 7904244054, 9003845456, 9710765203

குறிப்பு :

**இந்தத் தொகுப்பு ஸ்ரீ மடம் புக் ஸ்டால் மற்றும் ஸ்ரீ பெரியவாள் முகாமிலும் கிடைக்கும்**

உ

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

# பாப புண்யங்கள்

சென்ற இதழ் தொடர்ச்சி...

புண்யத்தின் ப்ரயோஜனம் கஷ்டம் இல்லாமல் ஸௌக்கியமாக இருப்பது. அந்த ப்ரயோஜனத்தைதான் எல்லோரும் விரும்புகிறார்கள். அதனால் மனம் சாந்தத்தை அடைகிறது. ஆனந்தம் உண்டாகிறது. நமக்குப் புண்யத்தின் ப்ரயோஜனத்தில் ஆசை இருக்கிறதே ஒழிய, நாம் பண்ணுவதில் பெரும்பாலானவைகள் பாப காரியங்களாகவே இருக்கின்றன. நாம் பாபம் பண்ணுவதற்கு நம் மனமே ஸாக்ஷியாக இருக்கிறது. புண்யம் பண்ணுகிற விஷயத்தில் சோம்பல் உண்டாகிறது.

பாபத்தின் பலன் கஷ்டம். இதை செய்யக் கூடாதென்று நம் மனசாட்சி தடுக்கும் கார்யங்கள் பாபகாரியங்கள். இது செய்ய வேண்டாமென்று எண்ணுவதுண்டு; ஆனால் செய்வதை விடுவதில்லை.

இந்த லோகத்தில் பிறந்த யாவர்க்கும் சுகத்தில் இச்சை உண்டு. புண்யமே செய்ய வேண்டுமென்று நினைக்கிறார்கள். பாபமே செய்யக் கூடாதென்பதும் தெரியும். ஆனால் அவர்கள் செய்வதில் நூற்றுக்கு எண்பது பங்கு பாபம்தான்; இருபது பங்கே புண்யம். இதை நினைத்தால் நிரம்ப வேடிக்கையாக இருக்கிறது. பாபம் வேண்டுமென்று நாம் ஆசைப்படுவதே இல்லை. ஆனாலும் பாப மூட்டை மேலும் மேலும் ஏறிக்கொண்டே இருக்கிறது. இந்த ஆச்சர்யத்தின் காரணம் தெரியவில்லை. ஏன் இப்படி? என்ற கேள்விக்குப் பதில் சொல்ல முடியவில்லை. பல காலத்திற்கு முன்பே அர்ச்சுனன் நம் அனைவருக்கும் சேர்த்துப் பகவானை கேட்டு இதற்குப் பதில் வாங்கி வைத்திருக்கிறான்.

**அத கேன ப்ரயுக்தோ 'யம் பாபம் சரதி பூருஷ:**

**அனிச்சன்ன் அபி வார்ஷ்ணேய பலாத் இவ நியோஜித:**

(கீதை 3-36)

''மனிதன் பாபம் செய்கிறான். அவனுக்கு அதைச் செய்ய ஆசை இல்லாத பொழுதே அவன் செய்கிறான். அவனை பாபம் பண்ண வைக்கிறது யார்? உபத்ரவப்படுத்திப் பாபம் செய்யச் சொல்கிற அந்தப் பேர்வழி யார்? பாபம் பண்ணவேண்டாம் என்று தான் ஞாபகம்;

பாபத்திற்கு கொஞ்சங்கூட இச்சை இல்லை. ஆனாலும் அவனை பாபம் பண்ண வைக்கும் ஆஸாமி யார்?'' என்று கேட்டான் அர்ச்சுனன். பகவான் அதற்குப் பதில் சொல்லியிருக்கிறார்.

**காம ஏஷ க்ரோத ஏஷ**
**ரஜோ-குண-ஸமுத்பவ:**

**மஹாஷனோ மஹா-பாப்மா**
**வித்த்யேனம் இஹ வைரிணம்**

**(கீதை 3-37)**

மனிதனுக்கு ஒரு வஸ்து வேண்டுமென்ற ஆசை இருக்கிறது, அதை அடைய ப்ரயத்னம் செய்கிறான். நியாயமான வழியில் அகப்படாவிட்டால் அந்யாய வழியில் முயற்சி செய்கிறான். அது தான் பாபம். அந்தப் பாபத்திற்குக் காரணமாக இருப்பது வேண்டும் என்னும் ஆசை. அதைத் தான் காமம் என்று சொல்லுவார்கள். அது நமக்கு ஒரு சத்ரு. மற்றொன்று இருக்கிறது அது க்ரோதம்--கோபம். ஒரு வஸ்துவின் மேல் ஆசைப்பட்டால் அது கிடைக்காத பொழுது அதற்குத் தடையாக இருந்தவர்கள் மேல் க்ரோதம் உண்டாகிறது. ஆசைப்பட்ட பொருள் கிடைக்காத பொழுது கோபம் உண்டாகிறது. காமம் திருப்பப்பட்ட பொழுது கோபமாகிறது. ஆதலால் இரண்டையும் ஒன்றென்றே சொல்லி விடலாம்.

ஒரு சமயம் காமமாக இருப்பதே பின்பு கோபமாக ஆகிறது. ரப்பர் பந்தை சுவர் மேல் எறிகிறோம். எறிந்தபொழுது அது பின்பு திரும்பி வருகிறது. எறியப்படும் பொழுது அது காமம் போல் இருக்கிறது. திரும்பி வருவதைப் போன்றது க்ரோதம். காமம் நிறைவேறாவிட்டால் கோபம் உண்டாகிறது. காமம் எதனாலும் திருப்தி அடையாது. எவ்வளவு சாப்பிட்டாலும் அதற்குப் போதாது. நாம் பசிக்கு ஆகாரம் கொடுத்தால் திருப்தி உண்டாகிறது. ஆசை, ஆசைப்படும் வஸ்துவைக் கொடுத்தால் அடங்குவதில்லை. அந்த வஸ்து கிடைத்துவிட்டதே என்று சமனம் அடைவதில்லை. காமம் நெருப்புப் போன்றது. நெருப்பு ஆகாரம் கொடுக்கக் கொடுக்க பரவிப் பெருகும். அதைப் போன்றதே காமமும். ஆகாரம் போட்டுச் சமனம் உண்டாக்குதல் நெருப்புக்கும் இல்லை. நெருப்புக்கு க்ஷண வர்த்மா என்று ஒரு பெயர் இருக்கிறது. அதற்குப் போனவழியல்லாம் கறுப்பை உண்டுபண்ணுவது என்பது அர்த்தம். நெருப்பு எங்கே போனாலும் பின்னால் கரியை உண்டாக்கிக் கொண்டே போகிறது. காமமும் அப்படித் தான். முதலில் சந்தோஷம் உண்டாகிறது. ஆகாரம் கொடுக்கக் கொடுக்கக் காமம் விரிகிறது. காமம் ஒரு பெரும் பசிக்காரம்; மஹாசநன் என்று கூறப்படும்.

க்ரோதம், காமம் நிறைவேறாமல் திரும்பி வரும்பொழுது ஏற்படுவது. அது காமத்திலும் உயர்ந்தது. இது நைஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

கலி வருகிறார். அவருடைய ஸேனாதிபதிகளாகிய காமன், க்ரோதன் முதலியவர்கள் உடன் வருகிறார்கள். ஸ்துதி பாடகர்கள் ஒவ்வொரு ஸேனாதிபதியின் பெருமையையும் எடுத்துச் சொல்லுகிறார்கள். க்ரோதனைப் பற்றியும் சொல்லப்படுகிறது.

காமம் புகாத இடம் இல்லை என்று சொல்லுவதுண்டு. காமன் பெரிய வீரன். ஆனால் க்ரோதன் அவனைக் காட்டிலும் பலவான். க்ரோதனுடைய கோட்டையில் காமன் பாணம் உள்ளே வராது. அந்தக் கோட்டைக்குள்ளிருந்து இந்த்ராதி தேவர்களையும் ஒரு கை பார்ப்போம் என்று க்ரோதன் சொல்லுவான். அந்தக்கோட்டை எது? துர்வாஸருடைய ஹ்ருதயந்தான் அது. அதற்குள் காமன் பாணம் செல்லாது.

நாம் செய்யும் பல பாப காரியங்களுக்கும் இந்தக் காமக்ரோதங்களே காரணமாக இருக்கின்றன. ரஜோ குணத்தால் இவை உண்டாகின்றன. பெரும் பசிக்காரன் காமன்; பெரிய பாபி க்ரோதன் இவர்கள் தான் நமக்குச் சத்ருக்கள்.

ஆசையின்றி ஒரு கார்யத்தைச் செய்தால் அப்பொழுது பாபமில்லை. ஆசைப்பட்டு ஒன்றைச் செய்வது தான் பாபம். பாபம் பண்ணிப் பண்ணி அந்தப் பழக்கம் பல காலமாக ஊன்றி இருக்கிறபடியால் அது இப்பொழுதும் பாபம் பண்ணச் செய்கிறது.

த்ரிகரணத்தாலும் பாபத்தைச் செய்கிறோம். மனத்தால் பலவகையான கெட்ட நினைவுகள் உண்டாகின்றன. அதனால் பொய் பேசுதல் முதலிய பாபத்தைச் செய்கிறோம். நமக்கு பகவான் வாக்குக் கொடுத்தது எதற்காக? ஹ்ருதயத்தில் உள்ளதைச் சொல்லட்டும் என்று கொடுத்திருக்கிறார். அப்படிச் செய்யாமல் பொய் சொன்னால், இவனுக்கு வாக்குக் கொடுத்துப் பிரயோஜனமில்லை என்று வாயில்லா பிராணியாக பிறக்கச் செய்வார். நமக்கு வாக்குக் கொடுத்திருப்பது ஸத்யத்தைச் சொல்வதற்காகவும், பகவந்நாமாவைச் சொல்வதற்காகவுமே.

மனம், வாக்கு, உடம்பு, பணம் என்னும் நான்கினாலும் பாபம் பண்ணுகிறோம். ஆசைப்பட்டு ஒன்றைச் செய்தால் பாபம் உண்டாகிறது. முன்பு கூறிய நான்கினாலும் நல்ல காரியங்கள் செய்ய வேண்டும். கயிற்றை எப்படி முடிந்தோமோ அப்படியே அவிழ்க்க வேண்டும். எந்த நான்கினால் நாம் பாபம் பண்ணப் பழகிக் கொண்டோமோ அந்த நான்கினாலேயே புண்யம் செய்யப் பழக வேண்டும்.

பாபத்திற்கு இரண்டு சக்திகள் இருக்கின்றன. ஒரு கெட்ட பழக்கம் இருக்கிறது. உதாரணமாகப் பொடி

போடும் பழக்கத்தை கவனிப்போம். அது இரண்டு வகைக் கெடுதலை உண்டாக்குகிறது. அன்றைக்குப் போடும் கெடுதல் ஒன்று. நாளைக்கும் போடும்படி தூண்டும் கெடுதல் ஒன்று. ஆக இரண்டு உண்டாகின்றன. அது போலவே பாப கார்யம் பின்னும் பல பாபங்களைச் செய்யும் பழக்கத்தை ஏற்படுத்துகிறது. அந்தப் பழக்கத்தை வாஸனை என்று சொல்லுவோம். நாம் நல்ல வாஸனையை ஏற்றுக் கொண்டு வர வேண்டும்; கெட்ட வாஸனையை ஒழித்து வர வேண்டும்.

ஆகவே, எல்லாப் பாபங்களும் ஆசைப்படுவதால் உண்டாகின்றன என்று எண்ணி முன் கூறிய நான்கு வகையில் ஆசையில்லாமற் கார்யங்களைச் செய்ய வேண்டும்.

நித்தியம் மனத்தினாலும், வாக்கினாலும், உடம்பினாலும், பணத்தினாலும் நல்ல காரியங்களைச் செய்து வர வேண்டும். நமக்குக் கிடைக்கும் பணத்தில் ஒரு தம்பிடியையாவது ஒவ்வொரு நாளும் தர்மத்திற்காக உண்டியல் கட்டிப் போடவேண்டும். அந்தப் பணத்தைக் குடும்பத்திற்கு ப்ரயோஜனப்படுத்தாமல் தர்மத்திற்கு விநியோகப்படுத்த வேண்டும். நம்முடைய பணமெல்லாம் நம்முடையதல்ல என்ற ஞாபம் இருக்க வேண்டும். இந்த உடம்பு போனவுடன் அது நம்முடைய ஸம்பந்தத்தை விட்டுவிடு. அந்தப் பணத்தை நம்முடையதாகச் செய்ய வேண்டுமானால், நாம் எங்கே போனாலும் செல்லக்கூடிய நோட்டாக மாற்ற வேண்டும். மேலுலகத்தில் இந்தப் பணம் செல்லாது. இந்தப் பணத்தைத் தர்மநோட்டாக மாற்றிவிட்டால் அது எங்கேயும் செல்லும். அப்பொழுது அந்தப் பணமும் நமக்குச் சொந்தமாகும்.

ஆகையால் குழந்தை முதற் பெரியவர்கள் வரையில் தனித்தனி தர்மத்திற்காக ஒவ்வொரு உண்டியல் வைத்துக்கொள்ள வேண்டும். நாம் பிறந்தது முதல் இந்தமாதிரிப் பழக்கங்களை வைத்துக் கொண்டிருந்தால் இதற்குள் எவ்வளவோ செய்திருக்கலாம். நம்முடைய காரியத்தை நாம் மறந்துவிட்டோம். குழந்தைகளுக்கென்று இப்பொழுதே தர்ம உண்டியல் ஏற்படுத்த வேண்டும். அவர்களுக்கு இன்ஷ்யூர் செய்வதில்லையா? இந்த இன்ஷ்யூரன்ஸ் இந்தப் பிறவிக்குப் பின்பும் (After - Life) உபயோகப்படுமாதலால் இதை ''After - life Insurance'' என்று கருத வேண்டும்.

வாக்கினாற் புண்யம் செய்யவேண்டும். நித்தியம் ஆயிரம் பகவந்நாமாவையாயவது சொல்ல வேண்டும். அது நமக்கு உபயோகப்படும். அன்றியும் உபத்ரவம் வராமல் காக்கும். வீணாக வம்பு பேசவதினால் பாபமும், அதனால் உபத்ரவமும் உண்டாகிறது. பகவந் நாமாவைச் சொல்வதால் அந்த

உபத்ரவமும் இல்லை. மேலே புண்யமும் உண்டாகிறது. பகவானுக்குப் பல நாமாக்கள் இருக்கின்றன. ''பேராயிரம் பரவிவானே ரேத்தும் பெம்மானே'' என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவருடைய ஒரு நாமாவை ஆயிரம் தடவை சொல்லவேண்டும். ஸித்திபெற்ற பெரியோர்களிடம் அந்த நாமாவைக் கேட்டுக் கொள்ளவேண்டும். கணக்குக்காகக் கயிறு ஒன்றை வைத்துக் கொள்ளலாம். நாமாகப் பகவந் நாமாவைச் சொல்வதானாலும் பாதகமில்லை.

மனத்தினால் நல்லகாரியம் செய்ய வேண்டும். கொஞ்சநாழிகை ஓரிடத்தில் இருக்கவேண்டும். பகவானை த்யானம் செய்ய வேண்டும். நம்முடைய மனது பல நினைவுகளோடு இருக்கிறது. அது பெரிய சினிமாவைப் போல் இருக்கிறது. ஹ்ருதயம் யாருடைய இடம் என்பதை அறியவேண்டும்.

ஹ்ருதயம் பகவானுக்குரிய இடம். அந்த இடத்தை நாம் குப்பைத் தொட்டியாக்கி இருக்கிறோம். அதை மெழுகிச் சுத்தப்படுத்தி, அதிற் பகவானை உட்கார வைத்து நாமும் உட்காரவேண்டும அதற்கு என்ன வழி? ஸ்வாமியின் பாதத்தை த்யானம் செய்யவேண்டும். நித்தியம் ஐந்து நிமிஷமாவது த்யானம் செய்ய வேண்டும். எந்தவிதமான ஸமயத்திலும் இது தவறாமல் நடக்க வேண்டும். இது சாப்பிடுவதைப் போன்றது. இது ஸ்வராஜ்யத்தை விட அதிகமென்றே சொல்லவேண்டும். ஆகாரம் செல்லாத காலத்திலும் இது அவச்யம் செய்ய வேண்டியது. அப்பொழுது ஈச்வர அனுக்ரஹம் உண்டாகும். அந்த அனுக்ரஹரம் எல்லாவற்றிற்கும் அனுகூலம். பணம் ஸம்பாதிக்க எவ்வளவோ காலத்தைப் போக்குகிறோம். நமக்கு உண்மையில் ஆத்மலாபமாக இருக்கும் இந்தக் காரியத்தை குறைந்த பக்ஷம் அரை மணியாவது செய்யக் கூடாதா? அந்த அரை மணியும் தர்மப் பணத்தைச் சேர்க்கும் காலமாகும். மனம் த்யானத்தில் ஈடுபட்டால் வாய் முதலியன அதன்படியே நல்ல காரியம் செய்யும்.

உடம்பினால் நல்ல கார்யம் செய்ய வேண்டும். கோயிலுக்குப் போய் ப்ரதக்ஷிணம் செய்து நமஸ்காரம் செய்ய வேண்டும். தண்டம் ஸமர்ப்பித்தல் என்று நமஸ்காரத்தைச் சொல்லுவார்கள். தடியைப் போல் விழுவது தான் அது. இந்த உடம்பு நமதன்று அவரது என்று நினைத்து அவர் ஸந்நிதியிற் போட்டுவிட வேண்டும்.

இப்படிச் செய்வதனால் பாபம் தானாக நழுவி விடும். அஹம்பாவம் குறையும். எவ்வளவுக்கெவ்வளவு நாம் இறங்குகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு மஹிமை ஏறும்.

ஸ்த்ரீகள் பர்த்தாவை நமஸ்காரம் செய்தாலே போதும். புருஷர்கள் கோயிலுக்குப்

போவதில்லை என்று ஸங்கல்பம் செய்து கொண்டு விட்டபடியால் அவர்களுக்கும் சேர்த்து ஸ்திரீகள் கோயிலுக்குப் போய் வருகிறார்கள். கோயிலுக்கு அவர்கள் போகக்கூடாது என்பது இல்லை. அவச்யமில்லை என்று கருதவேண்டாம். மூலலிங்கத்தைத் தர்சிப்பவர்கள் சிலர். த்வஜ ஸ்தம்பத்தை தர்சித்தாலே சிலருக்குப் போதும். கோபுர தர்சனத்தாலேயே சிலருக்குப் புண்யம் வந்துவிடும். ஸ்த்ரீகளுக்கு பர்த்தாவை வணங்குவதே போதும். அதிகாரிகளுக் கேற்றபடி ஒவ்வோரிடம் இருக்கிறது. அதற்கு ஏற்றபடி தேகத்தை அர்ப்பணம் பண்ணவேண்டும்.

ஆகவே, நாம் நான்கு வகையிற் பாபம் பண்ணியிருக்கிறோம்; இன்னும் பண்ணி வருகிறோம். இதை நிறுத்துவதற்கு மாற்று தர்மம். அந்தத் தர்மத்தை த்ரிகரணத்தாலும், பணத்தாலும் செய்ய வேண்டும். உடம்பினால் ப்ரதக்ஷிணம் முதலியவற்றைச் செய்ய வேண்டும். இது எனதன்று, பகவானது என்று எண்ணித் தண்டம் ஸமர்ப்பிக்க வேண்டும். ஆலயம் இல்லாவிட்டால் ஸ்மரணம் செய்து கொண்டாவது செய்யலாம். வாக்கால் பகவந் நாமாவைச் சொல்லவேண்டும். மனத்தால் சரணாரவிந்த த்யானம் செய்ய வேண்டும். பணத்தால் தான தர்மம் செய்யவேண்டும்.

நாம் பாபம் பண்ணாமலிருந்தால் புண்யம் செய்ய வேண்டாம். பாபம் பண்ணியிருக்கிறோமாகையால் அவச்யம் இந்தத் தர்மங்களைச் செய்யவேண்டும். குழந்தை முதல் வ்ருத்தர் வரைக்கும் உள்ள எந்தப் பருவத்தினராயினும், எந்த ஜாதியாரானாலும் இந்த நான்கு வகையிலும் தர்மம் செய்தால்தான் பாபம் நிவர்த்தியாகும். புண்யபலம் ஏற ஏறப் பாபம் குறையும். ஆத்மலாபத்திற்கு வேண்டிய முதல் சேரும். இந்தத் தர்மங்களை கை, கால் முதலிய கரணங்கள் நமது ஸ்வாதீனத்தில் இருக்கும்பொழுதே செய்து கடனையடைத்து முதலையும் சேர்க்க வேண்டும். நிர்யாணகாலம் வந்துவிட்டால் நமது அவயவம் நாம் சொல்லியபடி கேட்காது. மனது நினைப்பதை வாய் சொல்லாது. காது கேட்காது. கை கால் நாம் சொல்லுவதைச் செய்யாது. கண் பார்க்காது. இந்த்ரியங்கள் நமது ஸ்வாதீனத்தில் இருக்கும்பொழுதே தர்மத்தைச் செய்து பாபத்தைப் போக்கடித்துக் கொள்ளவேண்டும். நாளைக்குச் செய்வோம், பிறபாடு செய்வோம் என்றிருக்கக்கூடாது. நாளை நடப்பது என்னவென்று நமக்குத் தெரியாது.

**ப்ரயாண-காலே மனஸாசலேன பக்த்யா**
**யுக்தோ யோக-பலேன சைவ**
**ப்ருவோர் மத்யே ப்ராணம்**
**ஆவேஷ்ய ஸம்யக் ஸ தம் பரம் ருஷம்**
**உபைதி திவ்யம்** (கீதை 8-10)

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த உடம்பை விட்டு நாம் ப்ரயாணம் செய்யும்பொழுது மனம் அசையக் கூடாது; மலை போல இருக்கவேண்டும். பாப பயம் இல்லாவிட்டால் அப்படி இருக்கலாம். காமமும் க்ரோதமும் இல்லையானால் அந்தப் பயம் இல்லை. தர்மம் செய்து வந்தால் அவை அடங்கும். நாம் பண்ணும் பாவங்களைப் பார்த்தால் நமக்குச் சாதங்கூடக் கிடைக்கக் கூடாது. அவ்வளவு பாபங்கள் செய்கிறோம். பகவான் பரம கருணையுடையவராகையால் இவ்வளவு ஸௌகரியங்கள் பாபிகளாகிய நமக்கும் கிடைக்கின்றன. ஆதலால் பாபத்தைக் குறைத்துக் கொள்ளவேண்டும். எல்லாவற்றையும் அவருக்கு அர்ப்பணம் செய்துவிட வேண்டும். அவர் ஆத்மாவுக்குள் இருக்கிறார். அவருக்கு உடம்பு முதலியவற்றை அர்ப்பணம் செய்வதால் ஆசை அற்று விடுகிறது. அப்பொழுது பாபம் இல்லை. பாபம் இல்லாதபொழுது ஸ்திரமான ஸௌக்யம் உண்டாகிறது.

---

## பிழை திருத்தம்

அக்டோபர் 21 இல் வர வேண்டிய ஸனாதன தர்மப் புதிருக்குப் பதிலாக அக்டோபர் 20 கேள்விகள் தவறுதலாக வந்துள்ளன. தற்போது அக்டோபர்21 கேள்விகளைத் தருகிறோம். தவறுக்கு மன்னிக்கவும்.

1. சிவாலயங்களில் பூஜை முறையை ஏற்படுத்தியவர் ?
2. த்ரோணரின் மனைவி, க்ருபரின் சகோதரி பெயர் ?
3. ஜன்னல் வழியாகத்தான் இப்பெருமாளைத் தர்சிக்கமுடியும்
4. புலோமஜா இவள் யார்?
5. பெண்கள் செய்யும் பூத யஞ்யம்
6. சுந்தரமூர்த்தி நாயனாருக்கு முன் அவ்வையாரை கைலாசத்திற்கு அழைத்துச் சென்றவர்
7. வைத்தீஸ்வரன் கோயில் தமிழ் இலக்கியத்தில் எப்படி அழைக்கப்பட்டது ?
8. திருவெண்காடர் இவருடைய ப்ரபல பெயர் என்ன?
9. பஞ்ச விஸ்வகர்மாக்கள் யார்?
10. தாம்ரபரணியின் வேறு பெயர் ?

# வேதோ நித்யம் அதீயதாம்

## உபநயனமான அந்தண மாணவர்களுக்கு முக்கிய அறிவிப்பு

"ஜந்தூனாம் நரஜன்ம துர்லபம்
அத: பும்ஸ்த்வம் ததோ விப்ரதா"

என்று ஸ்ரீ சங்கர பகவத்பாதர் தன்னுடைய விவேக சூடாமணி என்னும் நூலில் குறிப்பிடுகின்றார். "அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்று ஔவையாரும் இதே கருத்தை கூறுகிறார். அந்தண குலத்தில் பிறந்த அனைவரும் வேதாத்யயனம் செய்ய வேண்டும் என்பது நியதி. இந்த நியதியை பல சிரமங்கள் வந்த பொழுதும் நமது முன்னோர்கள் கடைபிடித்து வந்துள்ளனர். ஆனால் தற்பொழுது உள்ள சமுதாய சூழ்நிலைகளால் இந்த அவிச்சின்னமான வேத பரம்பரையில் தொய்வு ஏற்பட்டுள்ளது. இதை சரிசெய்து மீண்டும் இந்த வேத பரம்பரையானது தழைத்தோங்க வேண்டும் என்பதற்காகத்தான் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பல ஊர்களில் பல வேத பாடசாலைகள் ஸ்தாபித்து நடத்தி வருகின்றார்கள்.

தற்போதைய சூழ்நிலையில் பள்ளி படிப்பும் மிக முக்கியமான ஒன்றாக மாறிவிட்டதால் வேதாத்யயனம் செய்து கொண்டே பள்ளியிலும் படித்து தேர்ச்சி பெறுவதற்கான வாய்ப்பும் ஸ்ரீ சங்கர மடம் மூலம் பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் தற்பொழுது காஞ்சிபுரத்தில் உள்ள ஸ்ரீ தண்டபாணி ஓரியண்டல் பள்ளியில் பள்ளி படிப்பும், அதோடு சேர்ந்து வேதம், சம்ஸ்க்ருதம், மற்றும் நமது சம்ப்ரதாய பழக்க வழக்கங்களையும் கற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் தமிழ்மொழியில் உள்ள பக்தி இலக்கியங்களும், நீதி நூற்களும் கற்பிக்கப்படும்.

இதன் சிறப்பம்சம் என்னவென்றால் இத்திட்டத்தில் சேர்ந்து பயிலும் மாணவர்களுக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் இரு வழிகளிலும் பயிற்சி தரப்படும். கல்வி, உணவு, தங்குமிடம் எதற்கும் கட்டணம் கிடையாது. 10 வயது முதல் 13 வயது வரையுள்ள உபநயனமான மாணவர்கள் சேர்க்கைக்கு விண்ணப்பிக்கலாம். பள்ளி படிப்பு முடிந்ததும் கல்லூரி படிப்புக்கு ஏற்பாடு செய்து தரப்படும்.

பெற்றோர்கள் இந்த பொன்னான வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டு தங்கள் குழந்தைகளுக்கும் நமது சமுதாயத்திற்கும் வளமான எதிர்காலம் அமைய ஒத்துழைப்பு அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய எண்கள்

R.வெங்கடசுப்ரமண்யன் :8903015221
V.P.ஸ்ரீனிவாசன் : 9445104873
G.பிரசாந்த் : 8056375421
K.ஸ்ரீராம் : 9894775434

# புராணக் கதை

காஞ்சி வாதூலன்



அந்தகன் வரும்போது யார் துணை என்று பாடக் கேட்டுள்ளோம். யமன் என்று பொருள் தெரிந்து கொண்டோம். இப்போது சொல்லப்போகும் அந்தகன் கதை வித்யாஸமானது என்று பீடிகை போட்டு பௌராணிகர் கூறலானார்.

சிவபெருமானும் பார்வதியும் கைலாசத்தை விட்டு பூமியில் வாராணசியில் மந்த்ராசலம் என்னுமிடத்தில் ஒரு சமயம் தங்கினர். ரம்யமான அந்த பர்வதத்தில் தங்கள் பொழுதை ரம்யமாகக் கழித்தனர். அப்போது ஒரு நாள் பார்வதி தேவி விளையாட்டாக சிவபெருமானின் கண்களை மூட ஈரேழுலகமும் அந்தகாரமாயிற்று. அதன் விளைவாக அவருடைய கண்களில் வெப்பமுண்டாக அதிலிருந்து மிகவும் கோரமான கறுப்பான, குருடான, குட்டையான ஒருவன் சிரித்துக் கொண்டும், அழுது கொண்டும் ஆடிக் கொண்டும் வந்தான்.

ஸ்ரீசங்கரரின் அந்தகாரத்தினின்று அவன் பிறந்ததால் அவனுக்கு அந்தகன் என்னும் பெயர் உண்டாயிற்று. அவர் பார்வதியிடம் நீ செய்த கார்யத்தால் இவன் உண்டானான். அவனைப் பார்த்துக்கொள்'' என்றார்.

அதே சமயம் ஹிரண்யாக்ஷன் சிவபெருமானைக் குறித்து கடும் தவம் செய்து கொண்டிருந்தான். அவன் தவத்தை மெச்சி சிவபெருமான் அவன் முன் தோன்றி வரம் கேட்க ' ஐயனே என் தம்பிக்கோ ஐந்து புதல்வர்கள் உள்ளனர். எனக்கோ ஒருவருமில்லை. எனக்கு ஒரு புதல்வனைத் தாருங்கள்'' என கேட்க சிவபெருமானும்

அந்தகனை அவனிடம் தந்து வளர்த்துவரச் சொன்னார். மிக்க மகிழ்ச்சியுடன் அந்தகனுடன் பாதாள லோகம் சென்று அங்கிருந்து மூவுலகையும் ஆட்டிப் படைக்கலானான். தேவர்கள் விஷ்ணுவிடம் முறையிட அவரும் வராஹ அவதாரமெடுத்து அவனை சம்ஹாரம் செய்தார். பின்பு அந்தகனை அங்கு அரசனாக்கி உலகை ப்ரபஞ்சத்தில் நிலை நிறுத்தினார்.

ஆனால் அந்தகனின் பாடு ஸ்ரமமாயிருந்தது. ப்ரஹ்லாதனும், அவனுடைய தம்பிகளும் அவனை எள்ளி நகையாடினர். மேலும் அவன் ஹிரண்யாக்ஷனுக்குப் பிறக்கவில்லை என்று பழிக்க அந்தகன் மிகவும் வெட்கி கானகம் சென்று தவம் செய்ய முனைந்தான். அவனுடைய கடும் தவத்தை மெச்சி ப்ரம்மா வரம் வேண்ட ''ப்ரஹ்லாதன் அனுஹ்லாதன் முதலானோர் என்னை வணங்க வேண்டும், கண்பார்வை கிடைக்க வேண்டும், உடல் அழகாக ஆக வேண்டும், யாராலும் நான் கொல்லப்படக் கூடாது (ஸிவன் , விஷ்ணு உள்பட ) ''என்று வேண்டினான். ப்ரம்மா பிறந்தவன் இறக்க வேண்டும் இதை மாற்ற முடியாது என்று கூற அந்தகன் 'வாக்கினலும் மனத்தாலும் நினைக்க முடியாத அழகியை என்று விரும்புகிறேனோ அன்றே எனக்கு மரணம் வரட்டும் என்று தன் கோரிக்கையை மாற்றிக் கொண்டான். சிவனின் ஆணைக்கு ஏற்ப ப்ரம்மாவும் வரம் ஈந்தார்.

தனக்கு அமரத்வம் வந்துவிட்டதாக நினைத்து அந்தகன் ஆக்ரோஷமாக லோகம் முழுவதும் போர் புரிந்தான். அப்போது மந்தார மலை அருகில் அவன் தன் படைகள் வரும்போது, அவனது படை வீரர்கள் 'ஐயனே இங்கே ஒரு பேரழகியைப் பார்த்தோம் என்று கூற அவனும் அவளைத் தேடிப் போனான். அங்கே அத்புதமான அழகி ஒரு முனிவருடன் இருப்பதைப் பார்த்து அவள் மீது காதல் கொண்டான். அவரிடம் ''ஏ முனிவனே என்னை வணங்கு இந்தப் பேரழகி என் மனைவி '' என்று கூற இருவருக்கும் பெரும் போர் மூண்டது. முனிவர் வேறு யாருமல்ல சாக்ஷாத் சிவபெருமானே. இறுதியில் சிவபெருமான் தன் த்ரிசூலத்தால் அவனை கொன்றார். இருப்பினும் அவன் ஆத்மா உடலை விட்டு நீங்காதது கண்டு அவனை மெச்சி ஏதேனும் வரம் கேட்கச் சொன்னார். அவனும் அவருக்குச் சேவை செய்ய விரும்ப அவனை தன் சேனைக்கு அதிபதியாக்கினார். அவன் பெயர் ப்ருணகிரதி என்று விளங்கியது.

(ஸிவ புராணம்)

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம்.
மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா

## ஸஞ்ஜயன் தூது



பாண்டவர்களின் வார்த்தையை அரசன் த்ருதராஷ்ட்ரனிடம் ஸஞ்சயன் கூறத்தொடங்கினான்.

ஸஞ்சயன் துர்யோதனன் அர்ஜுனனின் வசனத்தைக் கேட்கட்டும்.

க்ருஷ்ணன் என் பக்கத்தில் இருக்க துர்யோதனனை அவனுடைய தம்பிகளோடு மாய்ப்பேன். நான் தூக்காமலேயே என் காண்டீபம் துள்ளுகிறது. நான் ஏற்றாமலேயே சப்திக்கிறது. அம்புகளோ துடித்து எழுகின்றன. ஸஞ்சயனே தேவேந்த்ரன் முதலான தேவர்கள் என்னுடன் இருக்க உன் அரசன் போர் புரிய முனைகிறான். என்னே அவனது மோஹம். மதிப்பிற்குரிய பீஷ்ம த்ரோண க்ருப விதுர மஹான்களே நீவிர் சொல்வது நடக்கும். கௌரவர்கள் ஆயுஷ்மந்தர்களாக இருக்கட்டும்.

**பீஷ்மர் கூறலானார்.**

துர்யோதனா நீ பார்க்கும் வாஸுதேவனும், அர்ஜுனனும், திவ்ய நர நாராயணர்கள் நாரத முனிவர் கூறியுள்ளார். சங்க சக்ர கதாபாணியாய் க்ருஷ்ணன் விளங்க, காண்டீபத்துடன் அர்ஜுனன் போர் புரியும்போது என் வார்த்தைகளை நினைப்பாயா?

கர்ணன் போர்க் களத்தில் நான் அனைத்துப் பாண்டவர்களையும் கொல்வேன். நித்ய எதிரிகளுடன் சமாதானப் பேச்சு எதற்கு?

*பீஷ்மர் என்னமோ இவன் ஒருவனே பாண்டவர்களைக் கொல்வேன் என்று கொக்கரிக்கிறானே அவர்களின் பதினாறு கலையில் ஒரு கலை கூடசமனமாக மாட்டான். உன்னுடைய புத்ரர்களின் வரப்போகும் அழிவிற்கு இந்த சூதபுத்ரனே காரணமாவான் என்பதை அரசனே அறி.*

*விராட நகரில் அர்ஜுனன் நம் எல்லோரையும் பலமாக எதிர்த்தும் ஆடைகளைக் கவர்ந்தும் போர் புரிந்தானே அப்போது எங்கே போயிருந்தான் இந்த கர்ணன்? உன் புத்ரன் துர்யோதனன் கந்தர்வர்களால் கவரப்பட்டு தூக்கிக் கொண்டு போனபோது இப்போது உறுமும் கர்ணன் எங்கே போனான்? அந்த கந்தர்வர்களும் அர்ஜுனனால் ஜயிக்கப்பட்டார்கள்.*

*துரோணர் அரசனே பிதாமஹர் பீஷ்மர் சொல்வது எதுவோ அதைப் பின்பற்று. அர்ஜுனன் எதைச் சொல்வானோ அதைச் செய்வான். அவனுக்கு இணையான வில்லாளி இப்பாரில் யாருமில்லை.*

***த்ருதராஷ்டிரன்*** *: தன்னைப் பண்டிதர்களாக எண்ணிக் கொண்டிருக்கும் என் புத்ரர்கள் நான் எவ்வளவு கத்தியும் கேட்கவில்லை. யுத்தத்தில் சர்வ நாசமேற்படும். சாந்தியை நான் நாடுகிறேன்.*

***துர்யோதனன்*** *: அட அரசனே எதற்கு அச்சம்? நாங்கள் பராக்ரமசாலிகள். போரில் நிச்சயம் வெல்வோம். இந் நாட்டைவிட்டு ஓடின யுதிஷ்டிரன் ஐந்து க்ராமங்களை யாசிக்கிறான். என்னுடைய சேனை பலத்தைக் கண்டு அஞ்சுகிறான். பதினோரு அக்ஷௌணி பலம் என்னுடையது. அவனுக்கு வெறும் ஏழே. எப்படி எனக்கு தோல்வி வரும்? அதனால் நீர் அஞ்ச வேண்டாம்.*

***த்ருதராஷ்ட்ரன் :*** *புதல்வ உன் மந்த்ரிகளுடன் ஆள பாதி ராஜ்யம் போறும். போரைத் தவிர் சமாதானம் செய்துகொள்.*

***துர்யோதனன் :*** *அரசே ஊசிமுனையினால் துளைக்கப்படும் நிலம் கூட பாண்டவர்களுக்கு ஈயேன். அரசன் சொல்லியதைக் கேட்க மறுத்து துர்யோதனனின் பேச்சைக் கேட்ட மந்த்ரிகளும் பெரியோர்களும் அங்கிருந்து மௌனமாகப் போயினர்.*

***ஸஞ்சயன்*** *: அவ்விடத்தை விட்டு நீங்கியபின் யுதிஷ்டிரன் கண்ணனிடம் சொல்வான்.*

***யுதிஷ்டிரன்*** *: க்ருஷ்ண மித்ரனே உன் நட்பைக் காண்பிக்கும் தருணம் வந்துவிட்டது. உன்னைத் தவிர எங்களை யார் காப்பார்? எங்களுக்கு ராஜ்யம் கொடாமல் சாந்தியை விரும்புகிறார் அரசன். வெட்கம் ஐந்து க்ராமங்களைக் கேட்டேன். அதையும் தர*

துர்யோதனன் இச்சிக்கவில்லை. இம்மாதிரி இக்கட்டான நிலையில் உன்னைத் தவிர எம்மை யார் காப்பார்?


**க்ருஷ்ணர்** : அச்சம் வேண்டாம். நானே சபைக்குச் செல்வேன். சமாதானம் பேசுவேன் இப்போரை நாசத்தின் பிடியிலிருந்து காப்பேன். யுதிஷ்டிரன் நீ அவைக்குப் போகவேண்டும் என்பது என் விருப்பமல்ல. உன் வார்த்தைகள் எவ்வளவு நல்லதாயிருப்பினும் துர்யோதனன் நம் வழி வரான்.

**க்ருஷ்ணர்** : அரசன் துர்யோதனன் இருவரின் உள்ளத்தையும் நான் அறிவேன். சமாதானப் பேச்சு இல்லையெனில் உலகம் நம்மைப் பழிக்கும். அவர்கள் ஏதேனும் முறை தவறினால் அவர்களை பஸ்மாக்குவேன். நம் கோரிக்கை நிறைவேறா விட்டாலும் பழிசொல்லிலிருந்து தப்பிப்போம்.

**யுதிஷ்டிரன்** : கண்ணா உன் செயல் நிறை வேறட்டும். ஜய விஜயீ பவ.

**க்ருஷ்ணர்** : நண்பனே உம்மையும் அறிவேன் துர்யோதனனையும் அறிவேன். உன் மனது தர்மத்திலும் அவர்களது மனம் அதர்மத்திலும் உள்ளது என்பதையும் அறிவேன். உண்மையில் யுத்தம் தவிர்க்கப்படாது என்று நினைக்கிறேன். நிமித்தங்களும் அதையே சூசிப்பிக்கின்றன துர்யோதனனின் ஆணைக்கு இணங்க ஸஞ்சயன் பண்டவர்கள் இருப்பிடம் வந்து சேர்ந்தான். தர்மரைக் கண்டு வணங்கி பேசலுற்றான்.

யார் நல்ல பணி செய்தாலும் அவர்களை அழைத்து, பாராட்டி, மேடை ஏத்தி - பொதுப் பணியிலே மேன்மேலும் ஈடுபடுத்தி - இப்படியாக இந்த அறம் வளர வேண்டும், அனைவரும் வளர வேண்டும். என்பதற்காக ஒரு உத்ஸாக சக்தியாக, உபதேச மூர்த்தியாக விளங்குகிறார்கள். கிடைத்த வாய்ப்பை, கிடைத்த நேரத்தை, கிடைத்த பொருளை, கிடைத்த மனிதர்களை கொண்டு - அதிகபட்சமாக எந்த அளவுக்கு சேவையை செய்விக்க முடியும் - என்பதற்கு உதாரணமாக விளங்குகிறார்கள். மொத்ததுல நோக்கம் என்ன, செயல்பாட்டு முறை என்ன? அயராது உழைப்பு, அனைவருக்குமாக உழைப்பு.



# ஸனாதன தர்மம் :

ரா ஸ்ரீ

**208. கேள்வி : ஜப மாலைகள் மூலம் எப்படி எண்ண வேண்டும்?**

**பதில் :** மாலையை நடு விரலில் வைத்துக் கொண்டு பெரு விரலால் அல்லது பெருவிரலை நடுவில் வைத்துக் கொண்டு சுற்றி எண்ன வேண்டும். இடக் கையால் தொடக் கூடாது. நழுவ விடக் கூடாது. உதறக் கூடாது.




**209. கேள்வி : ஜப மாலை இல்லாத போது எப்படி எண்ன வேண்டும்?**

**பதில் :** விரல்களில் ரேகைகளால் எண்ண வேண்டும்.

**210. கேள்வி : ப்ரும்மம் ரௌத்ர மணி என்றால் என்ன ?**

**பதில் :** தர்பையினால் போடப்பட்ட முடிச்சுக்கு ப்ரம்மம் என்று பெயர். ருத்ராக்ஷ மணியே ரௌத்ர மணி எனப்படும்.


**211. கேள்வி : காயத்ரி மந்த்ரத்தை எப்படி எண்ண வேண்டும்?**

**பதில் :** கை விரல் ரேகைகளால் எண்ணுவது உத்தமம்.

**212. கேள்வி : காம்ய ஜபம் என்பது என்ன ?**

**பதில் :** விருப்பம் நிறைவேற ஜபம் செய்பதற்கு காம்யஜபம் என்று பெயர். சிலவற்றைப் பார்ப்போம்

**விருப்பம் நிறைவேற :** ஹரி ஆனந்தன் மாதவன், **சத்ரு பயம் :** ராமன், பரசுராமன் ந்ருசிம்மன், த்ரிவிக்ரமன், **வித்தைக்கு :** புருஷோத்தமன், **கண்களில் நோய் நீங்க :** கேசவன் புண்டரீகாக்ஷன், **பயம் நீங்க :** ஹ்ருஷீகேசன், **மருந்துண்ணும்போது :** அச்சுதன் அம்ருதன், **போருக்குப் போகும்போது :** அபராஜிதன், **வெளிப் பயணம் செய்யும் போது :** சங்கீ சக்ரீ கதீசார்ங்கி கட்கி என்று கூறி நாலு திக்கையும் வணங்க வேண்டும். **இருட்டில் சங்கடத்தில் :** நரஸிம்மன் **விஷ பயம் போக :** கருடத்வஜன் **ஸ்நான நமஸ்கார காலங்களில் :** வாஸுதேவன் த்ருஷ்டி தோஷம் அகல அனந்த அச்யுத **கெட்ட கனவு போக :** ஸ்ரீதரன் நாராயணன் **வெள்ள அபாயம் நீங்க :** பர்யங்க சாயி **பயிர் வ்ருத்திக்கு :** பலபத்ரன் **குழந்தை வேண்டின் :** ஜகத்பதி **அமங்கலம் விலக :** விஸோதன் **பஞ்ச பூத மரண பயம் :** வாஸுதேவன் **எல்லாவித பயம் விலக:** ராம மாலையில் மேற்கு முகமாக அமர்ந்து கொண்டும் செய்ய வேண்டும்.



*பாரதம் முழுவதும் பாதயாத்திரை செய்த ஆதிசங்கரர், தன்னுடைய - அவதார நிறைவு சமயத்திலே, முப்பத்தியிரண்டாவது வயதிலே, வந்த இடம் காஞ்சீபுரம். நூறாண்டு காலம் நம்மிடத்திலே வாழ்ந்த, பெரியவர்கள், தேர்ந்தெடுத்த இடம் - இந்த காஞ்சீபுரத்திற்கு வந்தார்கள். பெரியவர்கள் ஞாபகம் வந்தால், காஞ்சீபுரம் ஞாபகம் வரும் - காஞ்சீபுரம் ஞாபகம் வந்தால், பெரியவர் ஞாபகம் வரும். ஆகர்ஷணம் - charisma - என்று சொல்கிறார்களே - அது போன்று ஆகர்ஷணம் செய்து - ஏன்னா இது வந்து பழக்கம் என்பது - ஈர்க்கப்பட்டு, சேர்க்கப்பட்டு, ஏற்கப்பட்டது.*

*மக்களுடைய நாடியை தெரிந்தவர். மக்கள் அவரை நாடினார்கள். மக்களுக்கு இவர் நலனை நாடினார். எத்தனையோ ஊர் இருக்கிறது. எத்தனையோ ஊரிலே பக்தர்கள் இருக்கிறார்கள் அவர்களுக்கு. ஆனால் காஞ்சீபுரத்தின் மீது ஒரு - ஒரு என்ன சொல்றது - பற்றற்றவர்களுக்கும் - இந்த காஞ்சீபுரத்தின் மீது ஒரு பற்று. இந்த பற்று என்று சொன்னால், ஒரு அபிமானம்.*